விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

மாநகர சபை. யாழ்ப்பாணம்.

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 16 வியாழக்கிழமை (29.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041




# முகர்ஜிக்கு வாக்குறுதி அளித்து 12 மணி நேரத்துக்குள் தாக்குதல்

## 21 பொதுமக்கள் பலி; 121பேர் படுகாயம்

(முல்லைத்தீவு)

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு வாக்குறுதி வழங்கி 12 மணி நேரத்திற்குள், நேற்றுப் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இடைவிடாது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் 21 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 121 பேர் படுகாயமடைந்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)



யாழ். மறைமாவட்டத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரைப் படத்தில் காணலாம்.

## வன்னியில் மனிதாபிமான நெருக்கடி ஐரோப்பிய ஒன்றியம் கவலை

### பாதுகாப்பு வலயம் பற்றி விளக்கக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடி தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் விசனமும் கவலையும் தெரிவித்துள்ளது.

வடக்கில் மோதல் பகுதிகளில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவிடம் கவலை தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தரத்திற்கு மதிப்பளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கோடிட்டுக் காட்டியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளி விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் பெனிற்றா பெரேய்ரோ வோல்ட்னர், ஐ.நா. மனிதாபிமான (12ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மாதகால வன்னிப் போரில் 150 படையினரும் 1500 புலிகளும் பலி

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்று வரும் இரு தரப்பு மோதல்களின் போது கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் 150 படையினர் கொல்லப்பட்டுள்ள அதேநேரம், ஆயிரத்து 500விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 2006ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் இதுவரை காலம் 3 ஆயிரத்து 700 படையினர் கொல்லப்பட்டுள்ள அதேநேரம் 13 ஆயிரம் புலி உறுப்பினர்கள் உயிரிழந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)


## விசுவமடுச்சந்தி படையினர் வசமாம்

(கொழும்பு)

விசுவமடுச் சந்தியை படையினர் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் கடும் மோதலின் பின்னர் இராணுவத்தின் 58வது படைப்பிரிவினர் நேற்று விசுவமடுச் சந்தியை கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசுவமடுவுக்கு வடக்கே நீண்டு செல்லும் வீதியில் பத்துக் கிலோமீற்றர் தூரத்தை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-5)

## மோதல்களில் சிக்கியுள்ள மக்களை பாதுகாக்க ஜனாதிபதி மகிந்த உறுதி



### பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல்களில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களை பாதுகாக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடக்கும் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. முல்லைத்தீவை பிடித்த இராணுவம் அதில் இருந்து முன்னேறி விடுதலைப் புலிகள் வசம் உள்ள (12ஆம் பக்கம் பார்க்க)



## கருணாநிதி சொன்னால்தான் விடுதலைப் புலிகள் கேட்பார்கள்



### நழுவுகிறார் ஜெயலலிதா

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று கருணாநிதிதான் இலங்கை செல்லவேண்டும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இது குறித்து நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி பெப்ரவரியில் ஏ-9 பாதை திறக்கப்படும்


### அரசு நம்பிக்கை

(கொழும்பு)

திட்டமிட்டபடி ஏ-9 வீதி பெப்ரவரி மாதத்தில் திறக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரி.பி.எக்கநாயக்க தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலத்தில் இந்த வீதி முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டதால் ஒப்பீட்டு ரீதியில் அந்த வீதி நல்ல நிலையிலேயே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆங்காங்கே சில இடங்களில் மட்டுமே இந்த வீதி பழுதடைந்து காணப்படுகிறது. இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினருடன் இணைந்து வீதி அபிவிருத்தி அதிகார சபை இதனைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நிகழும் மனிதப் பேரவலத்தைப் நிறுத்தக்கோரி யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஆரம்ப நாளான நேற்று, யாழ். ஆயர் மற்றும் வண.பிதாக்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

# வன்னியில் நிகழும் மனிதப் பேரவலத்தை நிறுத்த அனைவரும் முன்வரவேண்டும்

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு கோரிக்கை

யாழ். மறைமாவட்ட ஆயர் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் மற்றும் அனைத்து சமூக, சமய அமைப்புக்கள் இணைந்து யாழ். தூய மரியன்னை பேராலய வளாகத்தில் தொடர் உண்ணாவிர முன்னெடுப்பை ஆரம்பித்திருக்கின்ற இந்நாளில் தங்களுக்கு அறியத்தருவது, வன்னி நிலப் பரப்பில் கடந்த பத்து நாட்களில் 400 க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் (ஒருநாளில் மட்டும் 300இற்கும் அதிக மானோர்), 1400 பேருக்கு மேற்பட்ட பொது மக்கள் காயப்பட்டும், ஊனமாக்கப்பட்டும் உள்ளார்கள்.

காயப்பட்டவர்களுக்கான போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் மற்றும் வேறு மருத்துவ மனைகளுக்கு கொண்டுசெல்லப்பட முடியாத நிலையிலும் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கின்றன.

இறந்துபோன பலரின் உடலங்கள் தொடர்ச்சியான கடும் செல்தாக்குதல்களி னால் இறுதிச்சடங்குகள் கூட செய்ய முடியாத ஒரு அவலநிலை! மேற்சொல்லப்பட்ட தரவுகள் யாவும் பதிவு செய்யப்பட்டவை மட்டுமே.

இவற்றைவிட இன்னும் பலர் இறந்தும் காயப்பட்டும் இருப்பது அறியமுடிகிறது. எமது மக்கள் எந்த வேளையிலும் அச்சம் பிடித்தவர்களாக தற்காலிக பதுங்கு குழி களுக்குள் தமது அன்றாட வாழ்வைக் கழிக் கின்றார்கள்.

உண்ண உணவும் ஏனைய அத்தி யாவசிய தேவைகளும் இன்றி அவர்கள் பேரவலத்திற்குள் வாழ்கின்றார்கள். இந் நிலையில் சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் காத்துவரும் மௌனம் தாங்கொணா வேதனையில் ஆழ்த்துகிறது.

அனைத்து மக்களும் அழியும்வரை இவர்களது மௌனம் தொடரப்போகிறதா?

ஆகையால் உண்ணாவிரதிகளாகிய நாம் அனைவரும் இணைந்து உங்களிடம் பின் வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

வன்னியில் நிலவும் மனிதப் பேரவ லத்தை உடனடியாக தடுத்து நிறுத்த நட வடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட சகல தரப்புகளை வேண்டி நிற்கின்றோம்.

நாம் அனைவரும் இப்போருக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத் துகின்றோம். நீதியான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து பேச்சுவார்த்தை மூலம் அமுல் படுத்துமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பி னரையும் வேண்டி நிற்கின்றோம் (ச-7)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவரிற்கு யாழ். நீதிமன்றம் 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை மனோராசன் என்பவர் நேற்றுக் காலை தனது வீட்டில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் கோப்பாய் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண நீதவான் நீதிமன் றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இவரிடமிருந்து 750மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்த சேனன், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத் திற்காக 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-14)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி-2009 நாளை மறுதினம் 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜாவும் சிறப்பு விருந்தினராக வலி.-தென்மேற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ் குமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-14)

# பாதுகாப்பு செயலரின் பெயரை பயன்படுத்தி பணம் கொள்ளையடிப்பு

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

பாதுகாப்பு படை உறுப்பினர்கள், பொலி ஸார் மற்றும் பாதாள உலகக்குழு உறுப்பி னர்கள் அடங்கிய குழுவொன்று தனது பெய ரைப் பயன்படுத்தி வர்த்தகர்களிடமிருந்து பெருமளவு பணத்தைக் கொள்ளையடித் திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இவ்வாறு மோச்டியில் ஈடுபட்டவர்களில் 50பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட் டார்.

தனது மெய்பாதுகாப்பாளர்கள் போன்று நடித்து வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டி ருப்பதாகவும் இவற்றைப் பயன்படுத்தி சில ஊடகங்கள் தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகவும் கோத்தபாய கொழும்பு ஊடகமொன்றிடம் கூறினார்.

கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் நடந்த கப்பம் கோரல் சம்பவங்களில் இதுவும் ஒரு பாரிய சம்பவம் என்றும் இந்தக் குழுவி னர் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயற்பட்டிருப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் வர்த்தகர்களை இலக்கு வைத்து அரசாங்கம் செயற்படுவதாக குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்தே குறித்த குழு பற்றி விசாரணைகளை நடத்து மாறு பொலிஸ் குழுவை நியமித்ததாகவும் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சில உறுப்பி னர்களும் அதில் அடங்கியிருந்ததால் பொ லிஸ் விசாரணைக்குழுவை அவர்கள் சாதக மாகப் பயன்படுத்தியதாகவும் கோத்தபாய கூறினார்.

மோசடிக்கும்பல் தனது மெய்ப்பாது காவலர்கள் எனக் கூறி பொதுமக்கள் விழிப் புக்குழுவையும் நம்ப வைத்திருப்பதாக கோத்தபாய குறிப்பிட்டார்.

தற்பொழுது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படை உறுப்பினர்களே மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் படுகொலையின் முக்கிய சூத்திரதாரிகள் எனவும் பாதுகாப்பு அமை ச்சின் செயலாளர் கூறினார். (ச-5)

# இலங்கை மின்சார சபைக்கு மூன்று ஜெனரற்றர்கள் காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்பட்டன

இலங்கை மின்சார சபைக்கு மூன்று ஜெனரற்றர்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. கொலனாவையிலிருந்து கொண்டுவரப்பட்ட மூன்று ஜெனரற்றர்களில் ஒன்று காங்கேசன் துறையிலிருந்து இறக்கப்பட்டு சுன்னாகம் மின் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு ள்ளது.

ஏனைய இரண்டு ஜெனரற்றர்களையும் இறக்கும் பணி நடைபெறுவதாக தகவல்கள் தெரிவித்தன.

இவை மூன்றும் தலா ஒரு மெகா வாட்ஸ்வலுசக் கொண்டவையென தெரிவிக் கப்பட்டது.

கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட இவ் ஜெனரற்றர்கள் பொருத்தப்பட்டு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சீனாவிலிருந்து காங் கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்ட மின் பொறியியலாளர்கள் நாடு திரும்பியுள் ளதால் அவர்கள் மேற்கொண்ட மின் வழங்கும் பணிகள் தாமதமடைவதாகவும் கூறப்பட்டது. (எ)

உ

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம்

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்



வருடாந்த மகோற்சவ பெருவிழா

கொடியேற்றம்

30.01.2009 வெள்ளிக்கிழமை பகல் 11.00மணி

சங்காபிஷேகம், வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா

06.02.2009 வெள்ளிக்கிழமை

தேர்த்திருவிழா

07.02.2009 சனிக்கிழமை காலை 10 மணி

தீர்த்தத்திருவிழா

08.02.2009 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணி

ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களின் நலன்கருதி மாணிக்கவாசக சுவாமிகள் மடாலய சபை திருவாசக மடத்தில் தங்குமிட வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம்,

ஆலய பரிபாலன சபை

புங்குடுதீவு -06

(C-2085)

# இன்று ஒரு தகவல்

## இரட்டைக் குழந்தைகள்

சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறப்பதுண்டு அல்லவா? அதில் மூன்று வகை உண்டு.

முதல்வகை : ஒற்றுமையுடைய இரட்டைக் குழந்தைகள். ஆணின் உயிரணுவும் பெண்ணின் உயிரணுவும் சேர்ந்து உருவாகும் கரு சாதாரணமாக வளர்ந்து பிறக்கும் போது ஒரு குழந்தையாக பிறக்கும்.

சில சமயம் இது வளரும் போது இரண்டாகப் பிரிந்து வளர்ந்தால் ஒரே மாதிரியான இரண்டு குழந்தைகள் பிறக்கும்.

இப்படி பிறப்பது இரண்டும் ஆணாக இருக்கும். அல்லது இரண்டும் பெண்ணாக இருக்கும். அபூர்வமாக சில சமயம் தாயின் இரண்டு உயிரணுக்கள் தந்தையின் இரண்டு உயிரணுக்கள் தனித்தனியாக சேர்ந்து இரண்டு கருக்கள் உருவாகி வளர்ந்து பிறப்பதும் உண்டு. இப்படி பிறக்கும் போது ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாம்.

மூன்றாவது வகை : மிக மிக அபூர்வம். உடல் இரண்டும் ஒட்டிக் கொண்டே பிறப்பது. சயாமிய இரட்டையர்கள் என்பது இதற்குப் பெயர் (Siamese Twins)

பொதுவாக இரட்டைக் குழந்தைகளாக பிறப்பவர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்வது அபூர்வம். அதுவும் சின்ன வயதிலிருந்து பிரிந்து விடுபவர்கள் மிகவும் குறைவு. அப்படி பிரிந்து வேறு வேறு இடங்களில் வாழ்பவர்களைக் கண்டு பிடித்து அவர்களைப் பற்றி ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார் தோமஸ் பூச்சார்ட் என்ற பேராசிரியர்.

மின்ன சோட்டா பல்கலைக்கழத்தின் உளவியல் துறைத் தலைவரான அவர், ஒன்றாக பிறந்து, ஒருவரை ஒருவர் பார்க்காமல் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழும் இரட்டைகளைக் கண்டு பிடித்தார். அவர்களை எல்லாம் ஒரே இடத்துக்கு வரவழைத்தார்.

ஆராய்ச்சிக்குச் சம்மதித்த இரட்டையர்களை மின்ன சோட்டா பல்கல்கழகம் பணம் கொடுத்து சுப்பிட்டது. ஆறு நாட்கள் அவர்களெல்லாம் விருந்தாளியாக தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய குணநலன்கள், நடை - உடை - பாவனைகள், பழக்க வழக்கங்கள், உடம்பில் உள்ள நோய்கள், பொழுது போக்குகள், நண்பர்கள், மத நம்பிக்கை...

இது சம்பந்தமாக 15 ஆயிரம் கேள்விகள் கேட்டு, கிடைத்த விபரங்களை கம்ப்யூட்டரில் கொடுத்து விபரங்களை தெரிந்து கொண்டார்கள். அப்பொழுது தான் சில ஆச்சரியமான உண்மைகள் தெரிய வந்ததாம். ஜரீன்மில்லர் ஆன் சிங்கர் என்ற இரண்டு பெண்களும் இரட்டையர்கள். பிறந்தவுடனே பிரிந்து விட்டார்கள். 60 வருடமாக ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

அப்படி இருந்தும் என்ன ஒரு ஆச்சரியம் தெரியுமா? இவர்கள் இருவரும் சந்திப்பதற்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தபோது... இரண்டு பேரும் ஒரே மாதிரியான பரிசுப் பொருளையே வாங்கிக்கொண்டு வந்தார்களாம்! ஒரே மாதிரி வேலைப்பாடுடைய தட்டுகளைக் கொண்டு வந்திருந்தார்களாம்.

ஆஸ்கர் ஸ்டோகர், ஜாக்யூக என்ற இரட்டையர்கள் பிறந்தவுடன் பிரிந்து விட்டார்கள். ஜெர்மனியில் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவராகி ஆஸ்கர் வளர்ந்து வந்தார். தென் அமெரிக்காவுக்குப் பக்கத்திலுள்ள டிரினிடாட் நாட்டில் ஒரு யூதமதக் குடும்பத்தில் ஜான்யூக் வளர்க்கப்பட்டார்.

இவர்கள் இரண்டு பேரும் சந்திக்க ஏற்பாடு செய்த போது இருவரும் ஒரே மாதிரியான கண்ணாடி போட்டிருந்தார்களாம். ஒரே மாதிரி உடை அணிந்திருந்தார்களாம். அதுமட்டு மல்ல... இருவரும் ஒரே மாதிரியான மீசை வைத்திருந்தார்களாம்.

அமெரிக்க இரட்டையர்களான டோனி மிலாய் ரோஜர்புருக் சிறிய வயதிலேயே இவர்களை இரண்டு வெவ்வேறு குடும்பங்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டது.

இவர்கள் சந்தித்த போது ஒரு ஆச்சரியம். இரண்டு பேரின் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, ஒரே மாதிரியான ஷேவிங் கிறீம். ஒரே மாதிரி பெயர் ஒயில் இருந்ததாம். இருவரும் சுவீடனிலிருந்து இறக்குமதியாகும் ஒரே வகை பற்பசையை வைத்திருந்தார்களாம்.

ஜிம் ஸ்பிசிங்கர் - ஜிம் லூயிஸ் என்ற இரட்டையர்கள் 39 வயது வரை ஒருவரை ஒருவர் பார்க்காமல் வளர்ந்தவர்கள். இவர்கள் இருவருமே கை நகங்களை கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். கார் றேஸ் பந்தயத்தில் விருப்பம் உள்ளவர்கள். புகை பிடிப்பவர்கள். ஒரே மாதிரியான கார் வைத்திருந்தார்களாம்.

இரட்டையர்களை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் என்ன சொல்கிறார் தெரியுமா? நம்முடைய குண நலன்களில் ஒரு சிறிய பகுதியை - ஆனால் முக்கியமான பகுதியை - பெற்றோர்களிடமிருந்து நாம் பெற்ற மரபணுக்கள் (Genes) தான் முடிவு செய்கின்றன. இதைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் நாம் மரபணுக்களின் 'கைதிகள்' அல்ல. நாம் வளரும் சூழ்நிலையும் நம்மை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது என்பது அவரது முடிவு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கமநல புலமை பரிசில்

## வருடா வருடம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கமநல அபிவிருத்தி திணைக்கள 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சென்ற வருடம் வழங்கப்பட்ட "கமநல புலமை பரிசில்" நிதியத்தினூடாக க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உயர் தரத்திற்கு தெரிவாகிய வறிய குடும்பங்களை சேர்ந்த 117 மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் வீதம் ரூபா 2 இலட்சத்து 340 ஆயிரம் புலமைப்பரிசில் நிதியாக வழங்கப்பட்டது.

மேற்படி நிதியை கமநல சேவை நிலையங்கள், பிரதேச செயலகங்கள், விவசாய சம்மேளனங்கள் மற்றும் இலங்கை வங்கி ஆகியன இந் நிதியத்திற்கு வழங்கி இருந்தன.

இதன் தொடர்ச்சியாக 2006/2007 காலப்பகுதியில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட விவசாய உள்ளீடுகளிற்கான சில போக்குவரத்து கட்டணங்கள் அரச அதிபரின் முயற்சியால் இலவசமாக்கப்பட்டமையினால் இதற்காக செலுத்தப்பட வேண்டி இருந்த ரூபா 43 இலட்சத்தை கமநல புலமைப்பரிசில் நிதிய கணக்கில் நிலையான வைப்பாக இட்டு இதிலிருந்து பெறப்படும் வருடாந்த வட்டி மூலம் வறிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த 35 மாண வர்களுக்கு தலா 20 ஆயிரம் வீதம் ஒவ்வொரு வருடமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இப்புலமைப் பரிசில் பெற்றுக்கொள்ள தகுதியுடையோர் க.பொ.த..சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளியானவுடன் தத்தமது பிரதேச கமநல சேவை நிலையங்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியும் எனவும் விண்ணப்பதாரிகளின் பெற்றோரில் ஒருவர் விவசாய சம்மேளன அங்கத்த வராக இருப்பதுடன் குடும்பத்தின் வறுமை நிலை க.பொ.த. சாதாரண தர பெறுபேறு ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகள் மற்றும் ஏனைய விசேட காரணங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு தெரிவு நடைபெறும் என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (ஓ)

## சுன்னாகம் கொமர்ஷல் வங்கியின் தொலைபேசி இலக்கங்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையின் தொலைபேசி இலக்கங்கள் நேற்று புதன்கிழமை மதியத்திலிருந்து மாற்றப்பட்டள்ளதாக கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மாற்றப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் வருமாறு, முகாமையாளர்- 021 224 0486, பொது-021 224 0521, 021 224 0522 பக்ஸ் இலக்கம்-021 224 0523. (ஓ-6)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை மீள் பரிசீலனை செய்ய பரீட்சைகள் திணைக்களம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

இந்த மீள் பரிசீலனைக்கான மேன் முறையீட்டை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் பதிவுத் தபால் மூலம் பரிட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி தற்போது வெளியாகியுள்ள மாணவர்களின் பரீட்சை முடிவுகள் திருப்தியற்று காணப்படுமாயின் மேன் முறை யீட்டின் மூலம் பாடசாலை அதிபர்கள் அதனை தெளிவுபடுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இராசி பலன்

29.01.2009
(தை16, வியாழக்கிழமை)
சதயம் பிற்பகல் 1.59 மணிவரை
திருதியை பிற்பகல் 5.06 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கீர்த்தி, சுபநிகழ்வு, குடும்ப மகிழ்ச்சி, தொழில் நன்மை. |
| இடபம் | நல்ல செய்தி, கல்வியில் ஆர்வம், போசன சுகம், அதிக பிரயாசை. |
| மிதுனம் | கட்டுப்பாடு, காரிய தாமதம், பிரயாணம், புதிய திட்டமிடல். |
| கடகம் | காரிய தடங்கல், அபகீர்த்தி, கலகம், உடல் நலக்குறைவு. |
| சிங்கம் | பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, நல்ல செய்தி, எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | பிறர் உதவி, தேக நலன், போசன சுகம், காரிய அனுகூலம். |
| துலாம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், பணவிரயம், ரோகநிலை. |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, சுபசெலவு, மரியாதைக்குறைவு, முயற்சி கைகூடும். |
| தனுசு | போசன சுகம், பிரயாணம், கூட்டு முயற்சி, நண்பர்கள் உதவி. |
| மகரம் | காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, கோபப்படுதல், பண விரயம். |
| கும்பம் | போசன சுகம், காரிய தாமதம், சிந்தனைமிகுதி, பொருள்சேர்க்கை. |
| மீனம் | பண விரயம், சயன சுகக்குறைவு, வீண் பகை, காரிய அலைச்சல். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 130 | 130,110 |
| பச்சைமிளகாய் | 300 | 350 |
| தக்காளி | 280 | 400 |
| அவரை | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 120 | 120 |
| கரட் | 80 | 100 |
| பூசணி | 70 | 80,100 |
| புடோல் | 50 | 50 |
| வாழைக்காய் | 120 | --- |
| சின்ன வெங்காயம் | 70 | 60,100 |
| பெரிய வெங்காயம் | 150 | 160,200 |
| பாகற்காய் | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 100 |
| கரணைக் கிழங்கு | 30 | 50 |
| பயிற்றங்காய் | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 130 |
| போஞ்சி | 70 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |

(7)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தரம் 1 மாணவர்களை சேர்க்கும் கால்கோள் விழாவில், மாணவர்களுடன் பாடசாலை அதிபர் இ.குணநாதன், பிரதம விருந்தினர் திருமதி. ருக்மணி ஆனந்தவேல், தரம் 1 வகுப்பு ஆசிரியை திருமதி சிவேந்திரன், நீர்வேலி செல்லக்கதிர்காமம் கோயில் பிரதமகுரு சிவ ஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் மற்றும் ஆரம்பப்பகுதி ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் படத்தில் காணலாம்.

## முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டி

தீவகம் தெற்கு பிரதேச சபை நடாத்தும் புங்குடுதீவு உப அலுவலக முன்பள்ளிச் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு உப அலுவலகத்தில் புங்குடுதீவு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி கு.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக தீவகம் தெற்கு பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## அதிபர்கள் இடமாற்றம்

(பருத்தித்துறை)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய அதிபர் எஸ்.பொன்னையா அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.

நாகர் கோவில் மகாவித்தியாலய அதிபர் எஸ்.திரவியராஜா புலோலி வேலாயுதம் மகா வித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.ஜெகநாதன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். (ஓ-52)

## கூடைப்பந்தாட்ட தெரிவுப் போட்டி

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட 15 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


எனவே அனைத்துப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட அணிகளையும் மேற்படி தெரிவுப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான நோயல் விமலேந்திரன் கேட்டுள்ளார். (ஓ-27)

## சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்டவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கள் விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை யாழ்.மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்து நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் ஆர்.வசந்தசேனன் சட்டவிரோதமாக கள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ரூபா 500 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-7)



பருத்தித்துறை இலங்கை வங்கியில் இடம்பெற்ற ஸ்மார்ட் இன்வெஸ்ரர் கணக்கு ஆரம்ப விழாவில் கணக்கை ஆரம்பித்த திருமதி எஸ்.பத்மநாதனுக்கு இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.சிவநாதன் கணக்குப் புத்தகத்தைக் கையளிப்பதையும், பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:பரு.நிருபர்)

# சமூகம் அடைந்துள்ள பின்னடைவுகளை விளையாட்டின் மூலம் தூக்கி நிறுத்த வேண்டும்

## உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிராணி மில்ஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு பிரிவினரால் இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் முதல் முறையாக 15 வயதின் கீழ் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி உடுவில் மகளிர் கல்லூரியில் இரு நாட்கள் நடைபெற்றது.

இப் போட்டியின் இறுதி நிகழ்வுக்கு உடற்கல்வி ஆசிரியர் பழ.தர்மகுமரான் தலைமை தாங்க உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபரும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவருமாகிய ஷிராணி மில்ஸ் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில், விளையாட்டு என்பது வெற்றி தோல்விக்கு அப்பாற்பட்டு சமூக ஒற்றுமையையும் சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. நாம் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு விளையாடுகிறோம். அது கிட்டவிலலை என்றால் துக்கப்படுகின்றோம். இதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தைப் பெற முடியாது. அண்மையில் கூட அமெரிக்க ஜனாதிபதி 'மாற்றம்' என்பது கட்டாயம் தேவை அதனை மகுட வாக்கியமாக ஏற்படுத்தியுள்ளார். அதே போல நாமும் எமது சமூகத்தில் மாற்றங் களை ஏற்படுத்த வேண்டும். எமது சமூகம் அடைந்துள்ள தோல்விகள், பின்னடைவுகளை விளையாட்டின் மூலம் தூக்கி நிறுத்த வேண்டும் எனக் கூறினார்.



அவர் மேலும் தனது உரையில், கூடைப்பந்தாட்டத்தை வளர்க்க வேண்டுமானால் பாடசாலை மட்டத்தில் பல போட்டிகளை சமகால அளவில் தொடர்ச்சியாக ஏற்படுத்த வேண்டும்.

இதன்மூலம் சிறந்த வீரர்களை உருவாக்கி தேசிய அணியில் இடம்பிடிப் பதற்கு இலகுவாக வழி சமைக்கலாம். அதற்கு நாம் ஒற்றுமையாக செயல்படவேண்டும் என் றார்.

அதனை அடுத்து வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் கேடயம் வழங்கிக் கௌரவிக்க, சிறந்த வீராங்கனைகளுக்கு திருக்குடும்ப கன்னியர் மடத்தின் உப அதிபர் சிறப்புப் பரிசில்களை வழங்கினார்.

இப் போட்டியில் முறையே முதல் மூன்று இடங்களை திருக்குடும்ப கன்னியர்மடம், கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியன பெற்றுக்கொண்டது. இப் போட்டியின் சிறந்த வீராங்கனைகளாக தர்சினி, கமஷினி மில்ஸ், தராசுதா, ஏன்சஷின் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-27)

## க.பொ.த.(உயர் தர) பரீட்சை பெறுபேறுகள்

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**கலைப் பிரிவு**
3A - சி.சிவரூபன்,அ.றில்வன்
2A,B- ஜே.ஜான்ஸ்ரன்
**வர்த்தகப் பிரிவு**
2A,B- ஏ.டினேஸ்

**யாழ்.மத்திய கல்லூரி**
(முன்னர்பிரசுரிக்காமல் தவறவிடப்பட்டது)
**வர்த்தகப் பிரிவு**
A,2B- கே.உமாப்பிரியன்




பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் விசேட அலகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் நாடாவெட்டி திறந்து வைப்பதையும், பிரதம விருந்தினருடன் சிறப்பு விருந்தினரான இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை பாடசாலை அலகு உத்தியோகத்தர் கே.கே.விக்னேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## சங்கானை நியூஸ்ரார் சம்பியனானது

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெற் மென்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் சங்கானை இளம் கதிர் அணியினை எதிர்த்து மோதிய சங்கானை நியூஸ்ரார் அணி சம்பியனானது. (ஓ)

## ஆதனவரி செலுத்தாதவர்கள் மீது வழக்கு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆதனவரி செலுத்தாது கூடுதலான நிலுவை காணப்படுபவர்கள் மீது யாழ்.நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக 11 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதனவரி செலுத்தாதவர்கள் மீது மேலும் இந் நடவடிக்கை தொடரும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## தையல் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கோப்பாய் பிரதேச செயலகத்தால் நடத்தப் பெற்று வந்த தையல் பயிற்சி நெறிக்கான கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஓ-2)




## யாழ்.செய்திகள்

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகர விநாயகப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இராஜகோபுர கும்பாபிஷேகம் அன்று காலை 7.26 மணிக்கும், மஹா கும்பாபிஷேகம் காலை 8.15 மணிக்கும், கும்பாபிஷேக மலர் வெளியீடு மாலை 6 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அத்துடன் இன்று வியாழக்கிழமை பகல் 12 மணிமுதல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். (ஓ-2)

## உறுதிகளை பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் ஒன்பது குடியிருப்பாளர்களுக்கு காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்ட உறுதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவிற்கு கிடைத்துள்ளது.

உறுதி உரிமையாளர்கள் விபரம் வருமாறு.

தர்மகுலசிங்கம் விஜயராணி, தம்பையா பத்மாதேவி, இளையநாதன் திலகவதி, ஆனந்தம் நல்லம்மா, குலநாயகம் கருணாவதி, நாகலிங்கம் மகேஸ்வரி, நல்லையா நாகம்மா, பசுபதிநாதன் சிவமலர், பொன்னுச்சாமி மகேஸ்வரி.

மேற்படி உரிமையாளர்கள் வழங்கப்பட்ட குடியிருப்பு அனுமதிப் பத்திரத்தினை (போமிற்) ஒப்படைத்து உறுதிகளைப் பெற்றுச் செல்லுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஓ-29)

# இலங்கையில் தமிழர் 54

### ஆரியரும் திராவிடரும்

திராவிட மொழி பேசும் ஒரு குழுவினர் கி.மு. நாலாவது ஆயிரவாண்டில் வடமேற்கு இந்தியாவில் குடியிருப்பினை அமைத்துக் கொண்டனர் எனக் கொள்ள இடமுண்டு. அங்கு வருவதற்கு முன் புலம்பெயர்ந்து வந்த வழியில் ஊரல் - அல்டெயிக் மொழிகள் பேசிய மக்களுடன் நீண்ட காலத் தொடர்பு நெருங்கிய முறையில் ஏற்பட்டிருக்கலாம்.

இத் தொடர்பின் அடிப்படையில் திராவிட மொழிகளுக்கும் ஊரல் - அல்டெயிக் மொழிகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகளை விளக்கலாம். கி.மு. 2000க்கும் 1500க்கும் இடையில் பெருமளவு தொடர்ச்சியாக வடமேற்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்கு இந்தியாவை நோக்கித் திராவிட மொழி பேசுவோர் புலம் பெயர்ந்தனர். கி.மு. 1500 அளவில் மூன்று தெளிவான மொழிப் பிரிவுகள் இவர்கள் மத்தியில் காணப்பட்டன எனலாம்.

மூல - வட திராவிடம், மூல - நடுத் திராவிடம், மற்றும் மூல - தென் திராவிடம். தாய் நிலையில் இருந்த மூல திராவிடத்தி லிருந்து புது மொழிகள் பிரிந்து உருவாகத் தொடங்கிய காலம் இவற்றுக்கு முற்பட்ட காலமாகும்.

மூல திராவிடத்திலிருந்து முதலில் பிரிந்துசென்ற மொழி மூல பிராஹுய் என்று கூறலாம். இது இந்தியாவுக்குத் திராவிட மொழி பேசுவோர் வந்த காலமாகிய கி.மு. நாலாம் ஆயிரவாண்டில் ஏற்பட்டிருக்கலாம். அடுத்துப் பிரிந்து சென்ற மொழி மூல - குருக்- மால்டோ மொழியாக இருக்கலாம். இது கி.மு. மூன்றாம் ஆயிரவாண்டிலாகும்.

மெரிட் ரூலென் என்ற இன்னோர் அறிஞர் பின்வருமாறு சுருக்கமாகத் திராவிட மொழியின் வரலாற்றை எடுத்துரைத்துள்ளார்: கி.மு. நான்காம் ஆயிரவாண்டில் மூல - திராவிட மொழி பேசியோர் முதல் தடவையாக வடமேற்கு இந்தியாவுக்குள் வந்தனர் எனத் தோன்றுகிறது.

கி.மு. இரண்டாம் ஆயிர வாண்டின் முதற்பாதியில் திராவிட மொழி பேசியோர் வடமேற்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்கு நோக்கிப் பரந்து சென்றனர். கி.மு. 1500 அளவில் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பாகத்தில் மூன்று திராவிட மொழிப் பிரிவுகளைச் சேர்ந்த மொழிகள் பேசப்பட்டன.

பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் இம் மொழிகள் பேசப்பட்டிருக்கலாம். அடுத்து வரும் மூன்றரை ஆயிரமாண்டு காலத்தில் இம் மூன்று மொழிப் பிரிவுகளும் படிப்படியாகத் திராவிட மொழிக் குடும்பத்தின் மூன்று கிளைகளாக உருவாகுவதைக் காணலாம்.

இத்தாலிய அறிஞராகிய லூயி லூக்கா கவல்லி- போஸா என்பவர் திராவிட மொழியின் வருகைக்கு மற்றவர்கள் கொடுக்கும் காலத்தை விட முற்பட்ட ஒரு காலத்தைக் கொடுக்கின்றார்." ஈரானின் மேற்கு எல்லைப் புறங்கள் தொட்டு இந்தியா முழுவதும் திராவிட மொழிகள் பேசப்பட்டன எனலாம்.

இம் மொழிகள் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதிய கற்கால உழவர்களால் முதலில் அறி முகப்படுத்தப்பட்டன என்று கொள்ளலாம்.

திராவிட மொழிகள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்தவை என்பதை எல்லோரும் ஏற்பதில்லை. திராவிட மொழிகளின் தாயகம் இந்தியாவே என்ற கருத்தை ஆதரிப்பவர் பலர் உளர். இந்திய வரலாற்று மொழியியலாளருள் முன்னணியில் நிற்கும் ஒருவராகிய பத்ரிராஜு கிருஷ்ணமூர்த்தி சுருக்கமாக இக் கருத்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மூலதிராவிடர் வெளியிலிருந்து துணைக் கண்டத்துள் வந்தனர் என்று முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களுள் பெரும்பாலானவை பிராஹுய் மொழி தான் திராவிடத்திலிருந்து முதலில் பிரிந்து சென்றது என்ற கருதுகோளின் அடிப்படையிலும் - சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமாய் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தின் அடிப்படையிலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள். ஆனால், பிராஹுய் மொழியில் மூல திராவிடத்தின் பழைய பண்பு ஒன்றுகூட இருப்பதற்குச் சான்று எதுவும் இல்லை.

திராவிடத்தின் மிகப் பழைய பண்புகள் சொல்லியல் மற்றும் ஒலியியல் தொடர்பாக இன்றுகூடத் தென்பகுதி மொழிகளிலேதான் காணப்படுகின்றன. ஆகவே, தற்போதைக்கு திராவிடரை இந்தியத் துணைக் கண்டத்தின் சுதேசிகளாகவும் இவர்கள் பொ.ஆ.மு.1500 அளவில் ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்த போது நாடு முழுவதும் பரந்து வாழ்ந்தவர் களாகவும் கருதுவதே மிகப் பொருத்தமாகும்.

### திராவிட மொழிகள் பேசப்படும் இடங்கள்

திராவிட மொழிகள் இன்று பெரும்பாலும் தென் ஆசியாவிலேதான் பேசப்படுகின்றன. எனினும் புலம்பெயர்ந்தோர் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சென்று இம் மொழிகளை ஆங்காங்கு பேசுகின்றனர். தென்னிந்தியாவிலேதான், பலரும் அறிந்தது போல, முக்கிய திராவிட மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம்

பேராசிரியர்
கா. இந்திரபாலா

ஆகியவை பெருந்தொகையினரால் பேசப்படுகின்றன. தென் இந்தியாவிற்கு வெளியே, வடக்கில் சில ஒதுக்கிடங்களில் வளர்ச்சியடையாத மொழிகளாகச் சிறு தொகையினரால் பேசப்படும் திராவிட மொழிகள் பல உள. இவை வரலாற்று மொழியியலாளருடைய ஆய்வுகளுக்கு மிகவும் பயனுள்ள மொழிகள்.

(தொடரும்)





முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எஸ்.ஆர். வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பொருளியல் பேராசிரியர் பாலகிருஷ்ணன்




புகள் என்பவையாகக் காணப்பட்டன.

சிவில் மோதல் காரணமாக எழுந்த நிலைமைகள் மாணவர்களைப் பாதித்ததனால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய பொறுப்புகளும் அவருடைய நிர்வாகப் பழுவினை அதிகரித்தது. இளம் பல்கலைக்கழகம், வளரும் பல்கலைக்கழகம் என்ற வகையில் நிர்வாகப் பணிகளின் பொறுப்புகள் அதிகரித்துச் சென்றன.

அவ்வாறு வந்தவர்களில் பேராசான் பாலகிருஷ்ணன் அவர்களும் ஒரு முக்கிய பங்காளியாக இருந்தவர் என்பது மறுக்கப்பட முடியாததாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அவர் 1987 இல் துணைப் பேரா சிரியராக நியமனம் பெற்றது அவரை மேலும் உயர் மட்டத்திற்கு எடுத்துச் சென்றது. அங்கு அவருடைய சேவைகள், கற்பித்தல், பிரதேச பொருளாதார ஆய்வுகள்,நிர்வாகப் பொறுப்

யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தில் அவர் சேவை யாற்றிய காலத்தில் பின்வரும் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளை (இவற்றில் பாடநெறி சம்பந்தமான விடயங்களும் மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்களும் சேர்ந்திருந்தன) வகித்துள்ளார்:

பொருளியல் துறைத் தலைவர் (1979-1984), வணிகத் துறைத் தலைவர் ( 1992-1993), கலைப் பீடாதிபதி (1984-1991), வவுனியா வளாக முதல்வர் (1997-2001),அத்துடன் பதில் துணைவேந்தராக பல தடவைகள் நிர்வாகஞ் செய்துள்ளார்.

பல்கலைக்கழக செனற்சபை, பல்கலைக்கழக ஆட்சிசபை ஆகியவற்றில் பல ஆண்டுகள் சேவையாற்றியதுடன், அவற்றின் உப குழுக்கள் பலவற்றிலும் உறுப்பினராக இருந்துள்ளார்.

### சேவை நயப்பு 3

பாடவிதானங்களின் சீராக்கம், அவற்றை இற்றைப்படுத்தல் மற்றும் ஆங்கில அறிவின் முக்கியத்துவம் என்பனவற்றின் வலியுறுத்தல்கள், செயற்பாடுகள் இக்காலப் பகுதியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

எழுபதுகள் மற்றும் எண்பதுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி நிகழ்வுகள் மற்றும் சிவில் மோதலின் விளைவாக,உறுதியற்ற நிலைமைகள் அனுபவிக்கப்பட்டன.

அவர் கலைப் பீடாதிபதியாக இருந்த காலத்திலும்,பதில் துணைவேந்தராகக் கடமையாற்றிய காலத்திலும் நிர்வாகப் பொறுப்புகள் சம்பந்தமாக பல அழுத்தங்கள் ஏற்பட்டன. இவ் வகையான இக்கட்டான, மேலும் நெருக்கடி வாய்ந்த நிலைமைகளிலும் குழப்பங்களின் மத்தியிலும் நிர்வாகத்தின் செயற்பாடுகளை திறம்பட நடாத்திச் சென்றுள்ளார்.

இக்கால கட்டங்களில் நிறுவனத்தின் குறுங்கால உறுதிப்பாடும், நீண்ட கால வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்படாத முறையில் நடவடிக் கைகளை கொண்டு நடாத்த வேண்டிய தேவை முக்கியமாக இருந்து வந்தது.

பேராசிரியர் பசுபதி சிவநாதன்
பொருளியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அவர்களின் வாண்மை விருத்தியில், கற்பித்தலும், ஆராய்ச்சியும் முக்கியத்துவம் பெற்றதைக் காணமுடிந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்திலும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த பொழுதிலும், அவரினால் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளும் மற்றைய எழுத்தாக்கங்களும் வெளி நாட்டுச் சஞ்சிகைகளிலும், உள்நாட்டு, இலங்கைப் பல்கலைக்கழக, சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்டன.

(தொடரும்)

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து பிரான்ஸ் வாழ் தமிழர்கள் திடீர் போராட்டம்



(பிரான்ஸ்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் இலங்கைப் படையினரால் ஒரே நாளில் பல நூறு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து பிரான்ஸ் வாழ் தமிழர்கள் ஆயிரக்கணக்கானோர் திடீரென போராட்டம் நடத்தினர்.

பிரான்சின் வெளிநாட்டமைச்சகம் அமைந்துள்ள அன்வலித் (Invalid) மற்றும் தமிழர்களின் வணிக மையமான லாச்சப்பல் ஆகிய பகுதிகளில் தன்னெழுச்சியாகத் திரண்ட தமிழர்கள் தம் உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளிக்காட்டும் வகையில் எழுச்சிகரமான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

பிரான்சின் வெளிநாட்டமைச்சகம் அமைந்துள்ள அன்வலித்(Invalid) பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திடீரென புலம் பெயர் தமிழர்கள் ஒன்று கூடி னர்.

செய்தி அறிந்த பிரெஞ்சு காவல்துறையினர் அங்கு விரைந்து வந்து , ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்களை அப் பகுதியில் இருந்து விலகிச் செல்லுமாறு வலியுறுத்தினர். அங்கிருந்து கலைந்து செல்ல மறுத்த தமிழ் மக்கள் குறிப்பிட்ட நேரம் வரை தமது கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

காவல்துறையின் வேண்டுகோளை ஏற்று அப் பகுதியில் இருந்து கலைந்து சென்ற மக்கள், பின்னர் தமிழர்கள் செறிவாகக் கூடுகின்ற வணிக மையமான பாரிசின் லாச்சப்பல் பகுதியிலும் தன்னெழுச்சியாக ஒன்று திரண்டு தாயக உறவுகள் மீதான தாக்குதல்களைக் கண்டித்துக் குரல் எழுப்பியுள்ளனர்.

முதலில் நூற்றுக்கணக்கில் திரண்ட மக்களின் உணர்வுடன் புதிதாக வந்து சேர்ந்தோரும் இணையத் தொடங்கியதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரளத் தொடங்கினர்.மக்களின் உணர்வெழுச்சிக்கு ஆதரவளித்து வணிக நிலையத்தாரும் கதவுகளை மூடிக் கொண்டனர்.

மக்களின் உணர்வுக் கொந்தளிப்பு வீதி மறியல் போராட்டமாக வடிவம் எடுத்தது. ஏறத்தாழ 4 மணிநேரம் மக்கள் லாச்சப்பலின் பிரதான வீதியில் அமர்ந்து மறியல் போராட்டத்தை நடத்தினர்.

காவல்துறையினரின் நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் மிக நீண்டநேரம் நடாத்தப்பட்ட இப் போராட்டம் வெளிநாட்டவர்கள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தது. (ஓ-6)

# ஆயுத கடத்தல் தொடர்பாக நியூயோர்க்கில் இருவர் கைது


(நியூயோர்க்)

அமெரிக்காவில் கைதுசெய்யப்பட்ட இருவர், புலிகளுக்கு ஆயுதங்கள் அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கோர்ட்டில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர். அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் புலிகளுக்கு ஆயுதங்கள் உள்ளிட்ட பொருட்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சிலரை அமெரிக்க பொலிஸார் கைதுசெய்தனர். நியூயோர்க்கில் விடுதலைப் புலிகளின் கிளை அலுவலகம் ஒன்றையும் இவர்கள் அமைத்திருந்ததாக பொலிஸ் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டது. இந்நிலையில், கைது செய்யப்பட்ட இருவர் மீதான விசாரணை புரூக்ளின் மாவட்ட கோர்ட்டில் நடந்தது.

அப்போது, அரசு வக்கீல் தனது வாதத்தில். “ இலங்கையில் இருந்து குடியேறியவர்கள் மூலமாக விடுதலைப்புலிகள் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக அமெரிக்காவின் நியூயோர் உட்பட பல்வேறு நாடுகளில் 12 கிளைகளை அமைத்துள்ளனர். இதில் திரட்டப்படும் நிதி மூலம் தங்களுக்குத் தேவையான ஆயுதங்களை வாங்கி குவிக் கின்றனர் என்றார். இதையடுத்து, இருவரும் புலிகளுக்காக பொருட்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டனர். (ஓ-6)

# முஸ்லிம் நாடு ஒன்றின் தலைநகரிலிருந்து உரை நிகழ்த்த அதிபர் ஒபாமா விருப்பம்



(வோஷிங்டன்)

பதவியேற்ற நூறு நாட்களுக்குள் முஸ்லிம் நாடு ஒன்றின் தலைநகரிலிருந்து உலக முஸ்லிம் மக்களுக்கு உரை நிகழ்த்துவேன் என, அமெரிக்காவின் புதிய அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். பல்வேறு பிரச்சினைகளில், அமெரிக்கா மீது முஸ்லிம் நாடுகள் கடும் கோபம் கொண்டுள்ளன. அந்த நாடுகளிடமும் அங்கு வசிக்கும் மக்களிடமும் தனது சமாதான மற்றும் இணக்கமான குணத்தைக் காட்ட முற்பட்டுள்ளார் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா.

அதன் ஒரு பகுதியாக துபாயைச் சேர்ந்த அல் – அரேபியா தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது, சமீபத்தில்தான் நான் பதவியேற்றேன். பதவியேற்ற நூறு நாட்களுக்குள் முஸ்லிம் நாடு ஒன்றின் தலைநகரில் இருந்து, முஸ்லிம் சமூக மக்களுக்கு உரை நிகழ்த்துவேன். வரக்கூடிய நாட்களில் முஸ்லிம் சமூகத்தினர் பயனடையும் வகையீலான பல நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும். பாலஸ்தீனம் – இஸ்ரேல் இடையே அமைதியை உருவாக்க எனது நிர்வாகம் ஆட்சிக்காலம் முடியும் வரை காத்திருக்காது. அதனால் எனது தேர்தல் பிரசாரத்தில் அளித்த உறுதி மொழிகளைக் காப்பாற்ற, மத்திய கிழக்கு நாடுகளுக்கு அமெரிக்காவின் தூதராக ஜார்ஜ் மிட்செல்லை அனுப்பியுள்ளேன்.

நாங்கள் இப்போது துவங்கியுள்ள இந்த நல்ல விஷயம் முடிவுக்கு கொண்டுவர நீண்ட நாட்களாகலாம். கியூபாவில் உள்ள குவாண்டனமோ சிறையை மூட முடிவெடுத்ததன் மூலம், எனது செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்பதை முஸ்லிம் சமூகத்தினர் அறிந்து கொள்ளலாம்.

அதேபோல், ஈராக்கில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக அளித்த உறுதி மொழிகளையும் காப்பாற்று வேன் என்கிறார். (ஓ-6)

# சிம்பாப்வேக்கு எதிரான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாக்கியுள்ளது

ஐரோப்பிய ஒன்றியமானது சிம்பாப்வேக்கு எதிரான தடைகளை திங்கட்கிழமை மென்மேலும் அதிகரித்துள்ளது.

சிம்பாப்வே மக்களின் அநேக அடிப்படைப் பொருளாதார மற்றும் சமூக தேவைகள் குறித்து கவனம் செலுத்த றொபேர்ட் முகாபே தவறியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

2004 ஆம் ஆண்டிலிருந்து முகாபே மீதும் அவரது முக்கிய நண்பர்கள் மீதும் விதிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள தடைகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது விவகாரசபை விரிவுபடுத்தியுள்ளது.

இதன்பிரகாரம் சிம்பாப்வேயில் இடம் பெற்றுவரும் வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட ஏனைய 60 பேர் மீது தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)



இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவு பிராந்தியத்திலுள்ள அடம்மாலிக் மருத்துவமனையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அபூர்வமான முறையில் ஒட்டிப் பிறந்த இரட்டைக்குழந்தைகளைப் படத்தில்காணலாம். இந்தக் குழந்தைகள் ஒவ்வொன்றும் முறையே ஒரு இருதயம், ஒரு சிறுநீரகம், இரு கால்கள், இரு கைகளைக் கொண்டுள்ளன.

# 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சலவைக்கல் உருவச் சிலை



(இஸ்ரேல்)

1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சலவைக்கல் உருவச் சிலையொன்று இஸ்ரேலிய அகழ்வாராய்ச்சியாளர்களால் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளது.

இது கி.பி. 2ஆம் நூற்றாண்டு அல்லது 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ரோமன் குத்துச் சண்டை வீரர் ஒருவருடையது என நம்பப்படுகிறது.

6 சென்ரிமீற்றர் உயரமும் 4 சென்ரிமீற்றர் அகலமும் உடைய இந்த சலவைக்கல் சிலையானது, மிக நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ

# கனடாவில் இலங்கை தமிழர்கள் சாதனை

(றொறன்ரோ)

கனடாவில் சாதனை படைத்த மூன்று தமிழர்கள் தொடர்பில் அங்கு வெளியாகும் ‘ முரசொலி’, ‘தமிழன் வழிகாட்டி’ ஆகிய பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

கனடிய அரசாங்கம் ஸ்காபரோவில் புதிதாகக் கட்டிய அதிநவீன மகப்பேற்று நிலையத்தினைத் திறந்துள்ளது.

அங்கு முதலாவது மகப்பேற்று மருத்துவ நிபுணர் யாழ்ப்பாணம் மாதகலைச் சேர்ந்த டாக்டர் சிவசம்பு கலைச்சந்திரன் ஆவார். அங்கு பணிபுரியும் முதல் தாதிய உத்தியோகத்தர் மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த திருமதி காந்தி கமலச்சந்திரன் ஆவார்.

இவர்களது வைத்திய சேவையில் கிடைத்த முதல் குழந்தையும் யாழ்.காரைநகரைச் சேர்ந்த சிவகாந்தன் கந்தையா, ரஜினி தம்பதியரின் குழந்தை ஆகும். கனேடிய அரசின் அதிநவீன மகப்பேற்று நிலையத்தில் பிறந்த முதல் குழந்தை, முதல் வைத்திய நிபுணர், முதல் தாதிமூவரும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் என்பது இங்கு சாதனைக்குரிய விடயமாகும்.மேற்படி முதல் குழந்தை டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி பிறந்துள்ளது. வைத்தியசாலை 10 ஆம்திகதி திறக்கப்பட்டுள்ளது.

இம் முதல் தமிழ்க் குழந்தைக்கு அங்குள் சென்.டானியல்கல்லூரிமுழுவாழ்க்கைக்குமான கல்வியை இலவசமாகவழங்க முன்வந்துள்ளது. ஸ்காபரோ றொக் வெலி யில் இப் புதிய நவீன மகப்பேற்று நிலையம் அதி நவீன வசதிகளுடன் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மொன்றியலில் தொடரும் கவனயீர்ப்பு; முதலாம் திகதி மனிதச் சங்கிலி போராட்டம்

செவ்வாய்க்கிழமை மொன்றியல் ஜென் தலோன் நிலக்கீழ் தொடரூந்து நிலையத்தில் மூன்றாவது நாளாக தொடர் கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இலங்கை அரச பயங்கரவாதம் சர்வதேச விதிகளையும், மனிதாபிமான எல்லைகளையும் மீறி மேற்கொண்டு வரும் தொடர் தமிழ் இனப் படுகொலையை சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தும் முகமாக இத் தொடர் கவனயீர்ப்பு நடைபெற்று வருகின்றது.

முன்னைய நாட்களை விட மிக அதிகமான மக்கள் கலந்துகொண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வருவதோடு, தொடர்ந்து தினமும் மொன்றியல் நகரின் ஏனைய பாகங்களில் இக் கவனயீர்ப்பு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை மிகப் பெரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கும் ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் முதல்வர் கருணாநிதியை வரலாறு குற்றம் சுமத்தும்

## தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் என்று தி.மு.க வினரால் அழைக்கப்படும் தமிழக முதல்வர் கருணாநிதியை வரலாறு குற்றம் சுமத்தும் என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளேடு தமது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

'விதியின் சதியா? மதியின் பிழையா?' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கைப் போர் தானாகவே ஓயும் வரை பிரச்சினையை காலதாமதம் செய்வதென்பது உண்மையிலேயே மிகப் பெரிய ராஜ தந்திரதம் தான். முல்லைத்தீவைத் தங்கள் ஆளுகைக்கு கொண்டு வந்து விட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. தங்கள் வெற்றியைக் காட்டுவதற்காக பத்திரிகையாளர் குழுவை அழைத்துச் செல்லவும் இலங்கை அரசு ஏற்பாடு செய்து வருகிறது. தங்கள் நாட்டின் ஒரு பகுதியை தாங்களே மீட்டெடுத்து வெற்றிக் கொடி ஏற்றியுள்ள இன்றைய சூழலில் இலங்கை இராணுவம் தன் பீரங்கிகளுக்கு ஓய்வு கொடுப்பது இயல்பானது.

இதைப் போர் நிறுத்தம் என்று சொல்ல முடியாது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் பகுதிகளை இழந்தாலும் கூட அவர்கள் மீண்டும் கெரில்லா போரை நடத்தவே செய்வார்கள். ஆகையால் விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் இந்தப் போர் தொடரும். தமிழீழம் கேட்டு எப்போதும் போல அவர்கள் தாக்குதலை நடத்துவார்கள். ஆனால், அது இங்கொன்றும் அங்கொன்று மாக நடக்குமே தவிர, இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக மீண்டும் மாறுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விசயம்.

கடந்த கால நூற்றாண்டில் இலங்கைத் தமிழர்கள் போராடிப் போராடி ஓய்ந்து விட்டார்கள். மீண்டும் இலங்கை இராணுவத்தை எதிர்கொள்ளவும் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆள் மற்றும் ஆயுதம் அளிக்கவும் அவர்களால் முடியுமா என்பதும் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

இத்தனை காலமாக விடுதலைப் புலிகளின் பகுதிகளை நெருங்க முடியாத இலங்கை இராணுவம் மிகக் குறுகிய காலத்தில் அதைச் செய்து முடித்ததற்கு முக்கியமான நான்கு காரணங்கள் உண்டு. இலங்கைத் தமிழர்களுக்கும் இலங்கையில் குடியேறிய தமிழர்களுக்கும் இடையே இருந்த விரிசலை மிகவும் பெரிதாக்கி, தனக்கு ஆதரவைத் தேடிக் கொண்டது இலங்கை அரசு.

இரண்டாவதாக கிழக்கு மாகாணத்தில் அரசியல் தீர்வுக்கு கருணாவை இணங்கும் படி செய்ததும் இலங்கை அரசுக்குப் பலமாக அமைந்துவிட்டது. உலக அளவிலான தீவிரவாதத்துக்கு எதிரான ஆதரவை விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசால் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது என்பது மூன்றாவது காரணம். நான்காவது முக்கியமான காரணம். இந்திய அரசு, இலங்கை அரசுக்குத் தந்த மறைமுக ஒத்துழைப்பு.

இருபத்தைந்து ஆண்டுகளாக நுழைய முடியாத வன்னிக் காடுகளுக்குள் இலங்கை இராணுவத்தால் நுழைய முடிகிறது என்றால் அது பாம்பின் கால் பாம்பறியும் என்பதாகும். விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா தந்த தகவல்களின் விளைவுதான் என்பதை மறுப்பதற்கில்லை.

தமிழகத்தில் ஆட்சியில் இருந்தும், மத்திய கூட்டணியில் முக்கிய அங்கம் வகித்தும் கூட இலங்கை இராணுவத்தின் தாக்குதலை நிறுத்த முடியாமலும் இந்திய இராணுவத்தின் உதவிகளைத் தடை செய்ய முடியாமல் விடயத்தை தள்ளிப் போட்டதற்காகவும், தமிழகத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த ஆதரவுக் குரல் கொடுத்த போதும் அதை முழுமையாகப் பயன்படுத்தத் தவறியதற்காகவும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் என்று தி.மு.க. வினரால் அழைக்கப்படும் தமிழக முதல்வர் கருணா நிதியையும் வரலாறு குற்றம் சுமத்தும்.


மத்திய அரசின் அரசியல் ஆய்வுக் குழுவில் ப. சிதம்பரம், டி. ஆர். பாலு என்ற இரு தமிழர்கள் இடம்பெற்று இருப்பதால் மத்திய அரசு ஏன் தாமதித்தது அல்லது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்பதாக முதல்வர் கருணாநிதி சொல்லவே முடியாது.

முடிவுகளை எடுக்க முடியாத நிலையில் பிரதமரும் நானும் உடல் நலம் குன்றி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தோம் என்று மக்களின் பரிதாபத்தைப் பெறவும் இயலாது. தமிழ்ச்சாதி பற்றி மகாகவி பாரதியார் எழுப்பிய அதே கேள்விதான் இன்று நமக்கும் எழுகிறது. (ஓ-6)

# உணவு உற்பத்திகள் வீழ்ச்சியடைந்து விலைகள் அதிகரிக்கும் அபாயம்

## ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபன தலைவர்

(மட்ரித்)



உணவு விலைகளிளாலான அண்மைய வீழ்ச்சியானது தானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பான விவசாயிகளின் ஊக்கத்தையும் விநியோகங்களையும் குறைத்து உலகளாவிய பட்டினி அதிகரிப்புக்கு வழிவகுக்கும் வகையில் அமைந் துள்ளதாக ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.

மட்ரித்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் உணவு பாதுகாப்பு சம்பந்தமான உயர்மட்ட கூட்டமொன்று தொடர்பில் திங்கட்கிழமை அளித்த பேட்டியொன்றின் போதே உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் தலைவர் ஜக்குயஸ் டியோவ் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் உணவு விலைகள் வீழ்ச்சியடைந்திருந்த சமயத்திலேயே அநேகர் தமது அறுவடைகளை விற்பனை செய்தார்கள். இதன் காரணமாக பலர் நஷ்டமடைய நேர்ந்ததுடன் விவசாய நடவடிக்கைகளில் மீள ஈடுபடும் உற்சாகத்தையும் இழந்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக உற்பத்திகள் கணிசமான அளவு சீழ்ச்சியடைந்து 2007/2008 ஆண்டுப் பகுதியில் உணவுப் பொருட்களுக்கு நிலவிய விலைகளை விட 2009/2010 ஆம் ஆண்டுப் பகுதியில் அவற்றின் விலை பெருமளவில் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

மட்ரித்தில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் ஐக்கிய நாடுகள் சபையினதும் உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புக்களினதும் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# பிரித்தானிய பிரதிநிதியும் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை நிலைமைகள் தொடர்பாக ஆராய பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அனைத்துலக அபிவிருத்திக்கான மனித நேய வல்லுநர் இலங்கைக்கு செல்ல வுள்ளதாக கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானிய தூதரக வட்டாரங்கள் கூறியதாவது,

பிரித்தானியாவின் மனிதநேய நிபுணர் எதிாவரும் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். எனினும் அவரின் பெயர் மற்றும் வருகை தரும் நாள் தொடர்பான விபரங்களை தற்போது வெளியிட முடியாது.

இவரின் வருகையின் பின்னர் மனிதாபிமான உதவிகள் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் ஊடாக வழங்கப்படும் என கூறப்படுகிறது. (ஓ-6)

ஞானச்சுடர்

12 ஆம் ஆண்டு 133ஆவது தை மாத மலர் வெளியீடு

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்.
காலம்:- 30.01.2009 வெள்ளிக்கிழமை மு.பகல் 10.00 மணி
தலைமையுரை:- கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
ஆசியுரை :- நல்லை ஆதீன முதல்வர்
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
வாழ்த்துரை:- சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள்
(போஷகர்-சந்.ஆச்.சை.க.ப.பேரவை)
தொகுப்புரை :- ஞானச்சுடர் மலர் வளர்ச்சி.(1998-2008)
வழங்குபவர் :- திரு.ஐ. சண்முகலிங்கம்
(குப்பிளான் சண்முகம்) அவர்கள்
வெளியீட்டுரை :- செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள்
அதிபர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
மதிப்புரை :- திரு. ஆ. சிவநாதன் அவர்கள்
(அதிபர், வல்வை சிவகுரு வித்தியாசாலை)

கட்டுரையாளர்களை கௌரவித்தல்

2006 ஆம் ஆண்டு வைகாசி தொடக்கம் 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களில் இடம் பெற்ற ஆக்கங்களை வழங்கியோரை கௌரவித்தல்

குறிப்பு :- குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகவிருப்பதால் தாங்கள் அனைவரையும் நேரத்திற்கு சமுகந்தந்து விழாவை சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

(அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரமம்,
சந்நிதியான் ஆ.சை. க. ப பேரவை.

(சி/2081)

இணுவில்

திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்



முப்பத்து மூன்று குண்ட
அதியுயர் மஹாயாக
புனராவர்த்தன ஸ்வர்ண
பந்தன பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

எண்ணெய்க்காப்பு தை 16 ஆம் நாள் (29.01.2009) வியாழக் கிழமை பகல் 12.00 மணிமுதல் வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி வரை

கும்பாபிஷேகம்

தை மாதம் 19ஆம் நாள் (01.02.2009)ஞாயிற்றுக்கிழமை

இராஜகோபுரம் -காலை 7.26 மணி
மஹாகும்பாபிஷேகம் -காலை 8.15மணி

அதனைத் தொடர்ந்து ஆசியுரை வழங்கப்படும்.
பஞ்சமூர்த்திகள் வீதியுலா மாலை -5.00 மணி

(சி/2082)

கும்பாபிஷேக மலர் வெளியீடு மாலை

# நாகர்கோவில் பகுதியில் கடல் நீர் இனிப்புத் தன்மையாக மாறியதால் பரபரப்பு

(சென்னை)

நாகர் கோவில் அருகே கடல் நீர் திடீரென இனிப்புத்தன்மை கொண்டதாக மாறியதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நாகர் கோவில் அருகே உள்ள கடலோரக் கிராமம் பெரியகாடு, அமவாசையையொட்டி கடல் செந்தளிப்பு ஏற்பட்டு கரையில் அதிகளவு தண்ணீரை வாரி இறைத்திருந்தது.

எதேச்சையாக அந்த நீரை எடுத்து முதியவர் ஒருவர் குடித்துப் பார்த்தபோது அது குடிநீர் போல் உப்பு சுவையற்று இருந்தது. இந்த விஷயம் அக்கம் பக்கம் உள்ள கிராமங்களுக்கு வேகமாகப் பரவியது.

இதையடுத்து ராஜக்கமங்கலம் துறை, முட்டம், கடியப்பட்டணம், பிள்ளை தோப்பு, அழிக்கால், பொழிக்கரை உள்ளிட்ட பகுதி களைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று அதை புனித நீராகக் கருதி போத்தல்களில் எடுத்து சென்றனர்.

இதனால் அங்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்த தோமஸ் கூறுகை யில்,

இந்தக் கடற்கரைப் பகுதியில் மற்ற இடங்க ளில் தோண்டினாலும், உப்புச் சுவையுடன் கடல்நீரே கிடைக்கிறது. இங்கு மட்டும் தண் ணீர் சுவையாக இருக்கிறது. தண்ணீரும் எடுக்க, எடுக்க குறையவில்லை என்றார்.

இந்நிலையில் தேங்கியுள்ள தண்ணீரில் கால் வைக்கக் கூடாது என ஊர் கமிட்டியினர் அறிவிப்புப் பலகை வைத்துள்ளனர். (ஓ-6)

# தமிழனாகப் பிறந்ததற்கு வேதனைப்படுகின்றேன்

## நடிகர் வடிவேலு



(சென்னை)

இலங்கைப் பிரச்சினையை முன் வைத்து 6 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வரும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களை திரைப்பட நடிகர் வடிவேலு, இயக்குநர்கள் சுந்தர்.சி, ஆர்.கே. செல்வமணி, மனோபாலா உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மாணவர்களை திரைப்படக் கலைஞர் கள் சந்தித்து உண்ணாவிரதத்தை கை விடும் படியும் வேறு வழியில் இணைந்து போராட்டத் தைத் தொடரலாம் எனவும் கோரிக்கை விடுத் தனர்.

இச்சந்திப்பின் போது நடிகர் வடிவேலு கூறியதாவது,

குடியரசு தினத்தன்று கொடியை அணிந்து கொண்டு இந்தியனாக பெருமைப்பட்டேன். ஆனால் இன்று இந்த மாணவர்களை பார்த்த போது தமிழனாக ஏன் இந்தியாவில் பிறந்தேன் என்று வேதனைப்படுகி றேன். செய்தித் தாள் களில் இலங் கையில் 300 பேர் இறந்து விட்டனர். 1000 பேர் காயம டைந்தனர் என்ற செய்திகளைப் படிக்கும் போது மிகவும் வேத னையாகவுள்ளது.

மாணவர்களின் போராட்டம் தான் எல்லா போராட்டத்திற்கும் வெற்றியை அளித்துள் ளது என்றார்.

இதேவேளை இயக்குநர்கள் மனோ பாலா, ஆர்.கே. செல்வமணி, சுந்தர் சி ஆகியோர் இலங்கையில் தமிழினத்தைக் காக்க போர் நிறுத்தத்துக்கு பிரதமர் வழிவகை காண வேண்டும்.

இயக்குநர்கள், நடிகர்கள், இசையமைப் பாளர்கள் என ஒவ்வொரு குழுவாக தினசரி வந்து சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஆத ரவு தெரிவிப்போம் என்றனர். (ஓ-6)

# ஈழத்தமிழர்களைக் காக்க ஒன்று பட்டு போராட வேண்டும்

## உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைத் காக்க அனைத்து கட்சியினரும் ஒன்றுபட்டு போராட வேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

காரைக்குடியில் தி.மு.க. சார்பில் நடை பெற்ற வீர வணக்க நாள் பொதுக்கூட்ட விழாவில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அமைச்சர் பொன்முடி மேற் கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் கூறுகையில் மொழிப்போர் தியாகிகள் வரலாற்றை இளை ஞர்களுக்கு ஊட்டுவதற்காகவும் மொழி உணர்வு, இன உணர்வு என்பவற்றை இளை ஞர்கள் மனதில் பதிக்க வேண்டும் என்பதற் காகவே இத்தகைய கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படு வதைக்கண்டித்து அனைத்துக்கட்சிகளும் ஒன்றுபட்டு போராட வேண்டும் போராட்டத்தின் மூலம் மொழி இனம் காப்பாற்றப்பட வேண் டும்.

இந்தியாவில் கலாசார சீரழிவு மூலம் தமி ழர்களை பிரிக்கும் சூழ்நிலையை சிலர் மேற் கொண்டு வருகின்றனர். அதை விடுத்து தமி ழர் கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். (ஓ-6)

# இராமதாஸ்– தா. பாண்டியன் திடீர் சந்திப்பு

(சென்னை)





இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர். தா.பாண்டியனும் பா.ம.க. நிறுவுனர் இராமதாசும் சென்னையில் திடீரென்று நேற்று முன்தினம் சந்தித் துப் பேசினர்.

சென்னை தி.நகரில் உள்ள பொங்கு தமிழ் அறக் கட்டளையின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை பா. ம.க. நிறுவுனர் இராமதாசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் சந்தித்துப் பேசினார்.

அவர்களின் சந்திப்பு அரை மணி நேரம் நடந்தது. அப்போது பா.ம.க. தலைவர் மணித முன்னாள் எம்.எல்.ஏ. பழனிச்சாமியும் உடனிருந்தனர். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை அவசரமாகக் கூட்டுவது தொடர்பாக இருவரும் விவா தித்ததாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# இலங்கை பிரச்சினையில் இந்திய அரசு இரட்டை வேடம்



## சரத்குமார் குற்றச்சாட்டு

இலங்கை பிரச்சினையில் இந்திய அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று அகில இந் திய சமத்துவ மக்கள் கட்சித்தலைவர் சரத்குமார் குற்றம் சாட்டினார். கோவையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

இலங்கையில் இராணுவத்துக்கும், விடு தலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் போரில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

அங்கு, உடனடியர்க போர் நிறுத்தம் செய்து அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற வேண் டும். இதை வலியுறுத்தி பல்வேறு அரசியில் கட்சிகள் போராட்டங்கள் நடத்தியும் மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் இலங் கையில் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாகக் கூறும் மத்திய அரசு, மறைமுகமாக இலங்கை அரசுக்கு ஆதரவளித்து இரட்டை வேடம் போடுகிறது என்றார். (ஓ-6)

# இலங்கையில் போர் நிறுத்தம் கோரி கிராம மக்கள் உண்ணாவிரதம்

(மன்னார்குடி)

அரியலூர், திருவாரூர் மாவட்ட கிராம மக்கள் இலங்கையில் போர் நிறுத்தம் கோரி, நேற்று முன்தினம் உண்ணாவிரத போராட் டத்தில் ஈடுபட்டனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரு கிலுள்ள பாளையக் கோட்டை கிராமத்தில் இலங்கையில் போர் நிறுத்தத்தை வலி யுறுத்தி ஆயிரக்கணக்கானோர் உண்ணா விரதம் இருந்தனர். பாளையக்கோட்டையில் ஐந்தாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் உள் ளன.

இங்குள்ள மக்கள் நேற்று முன்தினம் காளி யம்மன் கோவில் எதிரே நான்காயிரம் பேர் கூடி உண்ணாவிரதம் இருந்தனர்.

கிராமத்து மக்கள், அனைத்துக் கட்சி யினர் பொது அமைப்பினர், மகளிர் குழு வினர் என அனைத்து தரப்பினரும் பங்கேற் றனர்.

இலங்கையில் நடக்கும் போரை உடன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

உண்ணா விரதத்துக்கு தலைமை என்று யாரையும் அறிவிக்காமல், ஊர்பொது மக்கள் சார்பில் என அறிவித்து ஆயிரக் கணக்கானோர் உண்ணாவிரதம் இருந் தனர்.

அக்கிராமத்தில் உள்ள அனைவரது வீடுகளிலும் கறுப்பு கொடியேற்றி வைத் தனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி, அரிய லூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தை சேர்ந்த விக்கிரமங்கலத்தில், அம்பாப்பூர், கீழ நத்தம், கடம்பூர், நாகமங்கலம், உரல்லியக் குடி மற்றும் அணிக்குறிச்சி பங்சாயத்து களை சேர்ந்த கிராம மக்கள் உண்ணா விர தம் இருந்தனர். (ஓ-6)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அனைத்து தமிழக எம்பிக்களும் இராஜிநாமா செய்ய வேண்டும்

## சட்டக்கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரத மேடையில் திருமாவளவன்



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக, தமிழகத்தின் அனைத்து எம்.பிக்களும் உடனே இராஜினாமா செய்ய வேண்டும் என்று, விடு தலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படு வதைக் கண்டித்தும், போர் நிறுத்தம் ஏற்படக் கோரியும், செங்கல்பட்டுச் சட்டக் கல்லூரி மாணவர்கள் 14 பேர், காலவரையற்ற உண் ணாவிரதம் தொடங்கினார்கள்.

செவ்வாய்க்கிழமை நடந்த 6 ஆவது நாள் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது, பந்தலில் 10 மாணவர்கள் மிகவும் சோர்வாக இருந்தனர். உண்ணாவிரத மேடைக்கு, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் சென்றார்.

மாணவர்களிடம் ''உண்ணார்விரதத்தை நிறுத்திக் கொள்ளுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். ஆனால் மாணவர்கள் மறுத்து விட்டனர். தொடர்ந்து உண்ணா நோன்பு மேற் கொள்ளப் போவதாக தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு, திருமாவளவன் வாழ்த்து தெரிவித்தார். அப்போது செய்தியா ளர்களிடம் பேசிய திருமாவளவன்,

ஈரோடு, திருவனந்தபுரம் வழியாக இலங் கை இராணுவத்துக்கு, இந்திய அரசு பீரங்கி களை அனுப்பியதாக, பத்திரிகையில் செய்தி கள் வெளிவந்துள்ளன. இந்த இனப்படு கொலையைக் கண்டு, 10 1/2 கோடி தமிழர்கள் வேதனை அடைகி றார் கள். இந்திய அரசு, தமி ழர்களின் உணர்வை மதிக்கவில்லை. கொச் சைப் படுத்துகிறது.

தமிழக அரசியல் கட்சிகள் ஒட்டு மொத் தமாக இந்திய அர சுக்கு பாடம் புகட்ட வேண்டும். இனி ஒரு நிமிடம் கூட தாமதிக் காமல், அனைத்து கட்சி களைச் சேர்ந்த மக்களவை, மாநிலங் களவை உறுப்பினர்கள் அனைவரும் தங்க ளது எம். பி. பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.

எங்கள் கட்சியின் மாநில செயற்குழு கூட் டம் 29 ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. அப்போது இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து அடுத்த கட்ட போராட்டம் பற்றி முடிவு எடுக்கப் படும் என்றார். (ஓ-6)




# கருணாநிதியும் ஜெயலலிதாவும் இலங்கை செல்ல வேண்டும்

## பா.ம.க. வலியுறுத்து

(சென்னை)

இலங்கை அதிபர் ராஜபக்ஷ விடுத்த அழைப்புக்குறித்து தமிழக அரசு பரிசீலனை செய்யவேண்டும்.

முதல்வர் கருணாநிதியின் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவும் இலங்கை செல்வ தன் மூலம் இலங்கைத் தமிழர்களின் இன் னல்கள் தீரும் என்றால் தாமதம் செய்யாமல் உடனடியாகச் செயற்படவேண்டும் என்று சட்ட சபையில் பா.ம.க உறுப்பினர் செந் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார். (ஓ-6)

ஒருவன் என்னை ஒருமுறை ஏமாற்றினால்– அவன் மானங்கெட்டவன். இரண்டு முறை ஏமாற்றினால் நான் மானங்கெட்டவன்!

– இஸ்ரேல்

வலம்புரி

## பொதுமக்களின் உயிரிழப்பை தடுக்க எவரும் பின்னிற்கக் கூடாது

வன்னியில் தொடரும் யுத்தத்தினால் பொது மக்கள் பேரவலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்களை வன்னி யுத்த சங்காரம் செய்து விட்டது.

அந்த சங்காரம் இன்னமும் ஓய்ந்தபாடாக இல்லை. இந்தியா தலையிட்டு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புகள் அடியோடு தகர்ந்து போய்விட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பிற்கு வந்தார். தேநீர் அருந்தினார். திரும்பிவிட்டார் என்ற அளவில் அவரின் பயணம் செப்படி வித்தையாகிவிட்டது.

எல்லாம் ஏமாற்றுவித்தை என்ற அளவில் இறைவனை நோவதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாத சூழமைவில் இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றனர்.

இருந்தும் வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும் இந் நேரத்தில் அதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் அனைவரும் ஒன்று திரண்டு செயலாற்ற வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற போர்வைக்குள் அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகுவதை எவருமே பொறுமையாகப் பார்த்திருப்பது மகா பாவமாகும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து, இடம் பெயர்ந்து இப்போது அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்திற்குள் தஞ்சம் புகுந்திருக்கும் வேளையில் அங்கும் எறிகணைத் தாக்குதல் நடத்தி பொதுமக்களைப் பலியெடுப்பது எவ்வகையிலும் நியாயமாகாது.

வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகுவதைத் தடுத்து நிறுத்த சிங்கள மக்களும் குரல் கொடுக்க வேண்டும்.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்தபோது ‘சமாதானம்’ என்ற பெயரில் வடக்கிற்கு வந்த தென்னிலங்கை பொது அமைப்புகள் இப்போது அமைதியாக இருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

வடக்குத் தெற்கு சமாதானப் பாலம் என்றெல் லாம் பேசியவர்கள் பொதுமக்களின் உயிரிழப்பின்போது பேசாதிருப்பதன் பின்னணி என்ன?

இலங்கை பெரும்பான்மை இனத்திற்குரிய நாடு. இதில் தமிழர்களின் உயிரிழப்புப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற நினைப்பிலா? சமாதானம் என்ற உச்சாடனம் யுத்தம் நடைபெறும்போதே மேலெழ வேண்டும்.

இதைவிடுத்து சமாதான காலத்தில் ஊர் வலங்கள், பயணங்கள் என காட்டாப்புக் காட்டி விட்டு யுத்தம் நடக்கும்போது பொதுமக்கள் எறிகணை வீச்சில், விமானத் தாக்குதலில் பலியாகும் துயரத்தில் பேசாதிருப்பது சமாதான உச்சாடனத்திற்குச் செய்யும் துரோகத்தனமாகும்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின் இழப்பை தடுக்க எவருமே பின்னிற்கலாகாது. ஒன்று திரண்டு முன்வரவேண்டும்.

# மனித உரிமைகள் பிரகடனம் நடைமுறைப் படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டால் வர்த்தக சலுகைகள் தொடரும்

## ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகைகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம் நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

வெல்ஜியத்துக்கான விஜயத்தை மேற் கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகமவைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இதனைத் தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களும் யுத்த நடவடிக்கைகளில் சிக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமை தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

யுத்தத்தில் பொதுமக்களின் உயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம தெரிவித் துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் என சுட்டிக்காட்டப்பட்ட அனேகமான சம்பவங்கள் குறித்த விசாரணைகள் பூர்த்தியடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு உதார ணமாக 17 நிவாரணப் பணியாளர்கள் கொல் லப்பட்ட சம்பவத்தின் விசாரணை அறிக்கை விரைவில் வெளியிடப் படவுள்ளதை அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஓ-4)

# வன்னி மக்கள் குடியேற்றப்பட்டாலே இராணுவ வெற்றி முழுமையடையும்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய இடத்தில் குடியமர்த்தப்பட்டாலே இராணுவ வெற்றி பூரணமடையுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

வடபகுதியை முழுமையாக மீட்பதற்கு இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றபோது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய இடத்தில் குடியமர்த்தப்படவேண்டியது அவசியமென ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

வன்னி மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாக கூறப்படுகிறது. எனவே அம் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய இடத்தில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். அவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்டாலே இராணுவ வெற்றி முழுமையளிக்கும் என்றார் அவர்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்கப்பட்டிருக்கும் பகுதிகளில் துரிதகதியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மோதல்கள் 98 சதவீதம் முடிபடைந்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதை சுட்டிக்காட்டிய திஸ்ஸ அத்தநாயக்க, அவ்வாறெனின் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய பெற்றோல் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கத்தால்முடியுமென கூறினார்.

அத்துடன் முல்லைத்தீவை இராணுவத்தினர் மீட்டமைக்கு நன்றி தெரிவித்து நாடளாவிய ரீதியில் தமது கட்சி சமய நிகழ்வுகளை நடத்தவிருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## திருகோணமலை தமிழ் இளைஞர்கள் படுகொலை தொடர்பான விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

திருகோணமலையில் 5 தமிழ் இளைஞர்கள் படுகொலை தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இதேபோல் கெப்பிட்டிக் கொலவாவில் பேருந்து குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையும் முடிவடைந்துள்ளது.

16 படுகொலை சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த 2006 ஆம் ஆண்டு விசாரணைகள் ஆணையம் அமைக்கப்பட்டது. இதில் இரண்டின் விசாரணைகள் தற்போது முடிவடைந்துள்ளன.

மூதூர் மற்றும் பொத்துவில் படுகொலை சம்பவங்கள் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் முடிவுக்கு வரும், என்று விசாரணை ஆணையத்தின் தலைவர் நீதிபதி உதலகமக தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பிரணாப் விஜயம் திருப்தியளிக்கவில்லை

## தமிழககட்சிகள் தெரிவிப்பு

(சென்னை)

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கைக்கான விஜயம் திருப்தியளிக்கவில்லை என தமிழகக் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கை அரசாங்கத்திடம் போர் நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமென தமிழக கட்சிகள் வலியுறுத்தி வந்தன. எனினும் இந்த விஜயத்தின் போது போர் நிறுத்தம் குறித்து வலியுறுத்தப்படாமை வருத்தம் அளிப்பதாக தமிழகக் கட்சிகள் கவலை வெளியிட்டுள்ளன. (ஓ-2)

# முக்காலத்தினதும் தலைவன் இறைவனாவான் – பாபா

ஆண்டவனின்றி இவ்வுலகம் இல்லை; அவனே எங்கும் நிறைந்துள்ளான். அவனே இறந்த, நிகழ், எதிர்காலங்களின் தலைவன்; உலகின் அனைத்து உயிரினங்களையும்



படைத்து, காத்து, அழிப்பவரும் அவரே ; அனைத்து உயிரினங்களின் சாரமும், உள்ளுறைபவரும் அவரே; பஞ்சபூதர்களின் செயற்பாட்டின் இயக்குனரும், உயர்ந்த தூய்மையும் கொண்டவரும் அவரே.

மனிதன் அனைத்து வடிவங்களையும் தனக்குள் கொண்டிருக்கிறான். விலங்குகள், தாவரங்கள், பூச்சிகள் போன்றவற்றின் தன்மைகளும் இவனிடமுண்டு. அது மட்டுமில்லாமல் அனைத்து ஜீவராசிகளின் உள்ளிருக்கும் தெய்வ தத்துவத்தையும் உணர்கிறான். மனிதனுக்கு நான்கு அன்னையர் உண்டு என பகவான் அருளுகிறார். சத்யம், தர்மம், அன்பு, சாந்தி என்பனவே அத் தாய்மார்கள். அவர்களை திருப்தி செய்து வாழ்தல் வேண்டும். ஆனால் மனிதனானவன் இப்புனிதமான அன்னையரை மறந்து வேறு அன்னையரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.

அநியாயம், அக்கிரமம், அதர்மம், அசத்தியம் போன்ற தாய்மார்களை விரும்பி நாடுகின்றான். இவர்களை எமது அன்னையராக தத்தெடுத்துக் கொண்டதனால் தான் நாம் பல இன்னல்களை அனுபவிக்கின்றோம். புனிதமானவர்களான சத்தியம், பிரேமை சாந்தி, தர்மம் ஆகியோரின் அரவணைப்பைப் பெறவேண்டிய நாம் அதனை விடுத்து செவிலித் தாய்மார்களுடன் பழகி எமது புனிதம், தெய்வத்துவத்தை இழக்கின்றோம்.

எனவே எக்காரணம் கொண்டும் அப்புனிதர்களை துறந்து வாழ்தலாகாது. இவர்கள் கொள்ளும் துன்பத்தின் விளைவாக மனிதன் தனதுள்ள அமைதியைத் துறந்து விடுகிறான். மேலும் காமம், குரோதம், பொறாமை, பேராசை, அகந்தை, மயக்கம் போன்றனவும் மனிதனிடம் சேர்ந்து கொள்கின்றன. இவை ஆறும் இறைவன் படைப்பிலேயே ஏற்பட்டவை. மனமே இவைகளின் எஜமான். மனதைக் கட்டுப்படுத்த மனிதன் முயற்சிக்கிறான். இருந்தும் அனைத்தும் வீணாகின்றன. இக்கெட்ட தன்மைகளால் மனிதமனம் நஞ்சடைகிறத. இதனால் எமது செயல்களும் நஞ்சாகிவிட்டன மனத்தின் தூண்டுதலால் வெளிப்படும் அனைத்துச் செயல்களும் நஞ்சாகவே வெளிப்படுகின்றன.

எனவே கெட்ட நடத்தைகள், கெட்ட சிந்தனைகள், தீய திட்டங்கள் நமது மனதில், செயலில் இருந்து விடுபட வேண்டுமெனில் நமது இதயத்தை அன்பினால் நிரப்ப வேண்டும். மனம் அன்பு மயமானால் செயல்களும் அன்புமயமாகும். அப்போது இறைவன் நமக்கு அருகிலேயே இருந்து நம் வாழ்வையும், நம் சந்ததியின் வாழ்வையும், துன்பமே இல்லாத இன்பமயமான நித்திய வாழ்வையும் தந்தருளுவார்.

ஜெய் சாயிராம்

யாதவன்



தீவக லயன்ஸ் கழகத்தினால் காரை நகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடத்தப் பட்ட காரைநகர் மக்களிற்கான மாபெரும் சேவைத்திட்டமுகாமில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஆ.சபாநாதன் உரையாற்றுவதையும் யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர்கள் அமைந்திருப்பதையும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதையும் மற்றும் பார்வைக்கான மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அமெரிக்கா 6.9 மில். டொலர் உணவு உதவி

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு 6.9 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உணவுப் பொருட்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.



வெல்லம்பிட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் இதனை உலக உணவுத் திட்டத்தின் ஊடாக வழங்கினார்.

இந்நிகழ்வில் அவர் பேசியதாவது,

அரசினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பான பிரதேசங்களை மோதல்கள் அண்மித்து வருவதானால் வன்னியில் வாழும் 2 இலட்சத்து 30 ஆயிரம் மக்களின் நிலை தொடர்பாக நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இரு தரப்பும் பொதுமக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் செறிவாக வாழும் பகுதிகளுக்கு அண்மையில் கனரக ஆயுதங்களை பாவிப்பதை விடுதலைப் புலிகள் தவிர்க்க வேண்டும். அரசும் பதில் தாக்குதல்களை பொதுமக்கள் செறிவாக வாழும் பகுதிகள் மீது நிகழ்த்துவதை தவிர்க்க வேண்டும் என்றார் அவர்.

அமெரிக்க அரசின் இந்த உதவி பொருட்களில் ஆயிரத்து 344 தொன் பருப்பு, 779 தொன் மரக்கறி எண்ணெய், 4 ஆயிரத்து 270 தொன் கோதுமை ஆகியன அடங்கியுள்ளதாக அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

# வன்னி நிலைமையை அவதானிக்க ஐ.நா. சபை தவறிவிட்டது

## நடேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கமே அறிவித்த பாதுகாப்பு வலயங்களில் பல நூறு அப்பாவி தமிழ் மக்களை மனிதாபிமானம் இன்றி படுகொலை செய்திருப்பது பாரிய போர்க் குற்றம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நெட் இணையத்தளத்துக்கு அவர் திங்கட்கிழமை இரவு அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் கேடயங்களாக பயன் படுத்தவில்லை. ஆனால், இனப்படுகொலை செய்யும் படை யினரிடம் இருந்து தப்பி தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக போராடும் புலிகளின் பகுதிகளை நோக்கியே அவர்கள் வரு கின்றனர்.

வன்னி நிலைமைகளை அவதானிக்க ஐக்கிய நாடுகள் சபையும் அனைத்துலக சமூகமும் தவறிவிட்டன. அரசாங்கம் அறிவித்திருக்கும் மக்கள் பாதுகாப்பு வலயங்களில் எதுவித அடிப்படை வசதிகளுமே இல்லை.

இந்த பாதுகாப்பு வலயங்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கமோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ நம்பவும் இல்லை.

புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர்களில் ஒருவரும் படு காயமடைந்திருக்கிறார். அனைத்துலக சமூக அமைப்புக்கள் போரை உடனே நிறுத்தி பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் மக்களுக்குரிய அத்தியாவசிய தேவை களை பூர்த்தி செய்ய வேண்டும் என்றார் பா. நடேசன். (ஓ-6)

# ஹெஜிங் தொடர்பான இடைக்கால தடை உத்தரவு உயர்நீதிமன்றத்தினால் வாபஸ்

## நிறைவேற்று அதிகாரம் தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை என பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வங்கிகளுடன் செய்து கொள்ளப்படவுள்ள ஹெஜிங் ஒப்பந்தம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை உயர் நீதி மன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாபஸ் பெற்றுக் கொண்டது உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழுவே இந்த தடையுத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டது.

உயர்நீதிமன்ற உத்தரை நிறைவேற்று அதிகாரம் உரிய முறையில் செயற்படுத்தா விடின் அந்த உத்தரவைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை என்று சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இந்த தடை உத்தரவை பாபஸ் பெற் றுக் கொள்வதாகவும் வழக்கை இரத்துச் செய்வதாகவும் அறிவித்தார்.

பெற்றோல் லீற்றரின் விலையை 100 ரூபா வரை குறைக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆட்சேபனை இருக்குமாயின் அவற்றை 27ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சட்டமா அதிபருக்கு கடந்த 13ஆம் திகதி ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் பிரகாரம் மேற்படி வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும் அரசாங்கத்தின் சார்பில் எவ் விதமான ஆட்சேபனைகளும் முன் வைக்கப்படவில்லை. இதனையடுத்தே உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான நீதியரசர்கள் குழு தடை உத்தரவை பாபஸ் பெற்று வழக்கை இரத்து செய்து கொண்டது. இதன் பிரகாரம் வெளி நாடுகளில் வங்கிகளுக்கு நிதிக்கொடுப்பது தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை ஜனாதிபதியின் கீழ் கொண்டுவருவதற்கான மற்றும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அஜந்த டிமெல்லை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கான சகல தடை உத்தரவுகளும் இரத்தாகியுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் பாலித தேரர் ஆகியோர் பெற்றோல் விலையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கு பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் கடந்த மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை குறை வடையும் போது உள்ளூரில் பெற்றோலின் விலை குறைக் கப்படாமல் விலைகுறைக்கப் படாமையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை ஜனாதிபதியின் கீழ் கொண்டு வருமாறும் இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனத்தின் தலைவர் அயந்த டி மெல்லை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நிறைவேற்று அதிகாரத்திற்கு உத்தரவு இட்டிருந்ததுடன் கெயின் ஒப்பந்தத்திற்காக வெளிநாடுகளின் வங்கிகளுக்கு நிதி கொடுப்பது தொடர்பிலும் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு இதுவரையிலும் அமுல் படுத்தப்படவில்லை என்றும் இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என்றும் மனுதாரர்கள் கடந்த 13ஆம் திகதி நீதிமன்றத்தில் கவனத்திற்கு கொண்டுசென் றனர்.

பெற்றோல் விலை குறைப்பு தொடர்பில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை அரசாங்கம் அமுல் படுத்தவில்லை. இது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என்று அன்று சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் நீதிமன்றத் தீர்ப்பை கணக்கில் எடுக்காது செயற்படுவாராயின் சட்டம் இல்லாத தேசிய மாகவே நாடு மாறும். அரசியல் அமைப்பின் 118ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையின் மதிப்பு மிக்க நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். இவ்வாறான நீதிமன்றத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற தீர்ப்பை நடை முறைப் படுத்துவதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் கட்டுப்பட்டுள்ளார்.

தீர்ப்பை முன்னெடுப்பதற்கு ஏதாவது இடையூறுகள் இருப்பின் அது தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர முடியும் .

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல் படுத்தாது அதனை கணக்கில் எடுக்காது இருப்பதற்கு நிறைவேற்று மற்றும் அமைச்சர் அவைக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை மற்றும் ஹெயின் ஒப்பந்தம் நாட்டை சீர் குலையச் செய்கின்ற மிகப் பயங்கரமான ஒப்பந்தம் என்பதனால் உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது என்று சுட்டிக்காட்டியதுடன் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் ஆட்சேபனை கடந்த 27ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்தில் கவனத்திற்கு கொண்டுவருமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கினார்.

எனினும் அரசாங்க்தினால் நேற்று முன்தினம் வரை எவ்விதமான ஆட்சேபனைகளும் முன் வைக்கவில்லை. இதனையடுத்து மேற்படி வழக்கு தொடர்பிலான சகல இடைக் கால தடை உத்தரவுகளையும் வழக்கையும் இரத்து செய்வதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஓ-6

# மூன்று மாகாண சபைகள் கலைக்கப்படலாம்

# பொதுத் தேர்தலோ ஜனாதிபதித் தேர்தலோ நடத்தப்படலாம்

## ஐ.ம.சு.மு. வின் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த கூறுகிறார்

(கொழும்பு)

வடமேல், மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் முடிவுற்ற பின்னர் மேலும் மூன்று மாகாண சபைகள் கலைக்கப்படலாம் அல்லது பொதுத் தேர்தலோ ஜனாதிபதித் தேர்தலோ நடத்தப்படலாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வடமேல், மத்திய மாகாணத்தில் எமது ஆட்சி மலர்வது உறுதியாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் தெரிவித்ததாவது,

மாகாணசபைத் தேர்தல்களின் வெற்றிக்கான அமைப்பு ரீதியான நடவடிக்கைகளை எமது முன்னணி வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது. கிராமம் கிராமமாக வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் தலைமைகளில் பிரதான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளோம். மலையகத்தில் தமிழ் மக்கள் மத்தியிலும் அமோகமான வரவேற்பு கிடைத்துள்ளது.

எனவே வடமேல், மத்திய மாகாணங்களிலுள்ள 44 தேர்தல் பிரிவுகளிலும் அரசாங்கம் வெற்றி பெறும்.


எமது படையினர் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளனர். இனி எஞ்சியிருப்பது 300 கிலோ மீற்றர் தூரமே. அதனையும் சுதந்திர தினத்திற்கு முன்பு படையினர் கைப்பற்றுவார்கள்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்வந்து விடும். எனவே நாட்டுக்காக மக்கள் மாகாண சபைத் தேர்தல்களில் அரசுக்கு வெற்றிக்கு பெற்றுக்கொடுப்பார்கள்.

இரண்டு மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கம் வெற்றி பெற்ற பின்னர் மேலும் மூன்று மாகாண சபைகள் கலைக்கப்படலாம் அல்லது ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ நடத்தப்படுவதற்கும் அதிகள வில் வாய்ப்புகள் உள்ளன என்று கூறினார். (ஓ-6)

# துடுப்பாட்டத்தில் ஜொலித்த இந்தியா முதலாவது போட்டியில் சாதித்தது

## ஜெயசூரியா சதம் அடித்தும் சோபிக்க தவறிய இலங்கை அணி




(தம்புள்ள)

காம்பீர்–ரெயினாவின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி முதலாவது ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

சனத் ஜெயசூரியா சதமடித்தும் இலங்கை அணி சோபிக்கத் தவறியது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகள், ஒரு இருபது–20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று தம்புள்ளயில் நடைபெற்றது. இதில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் காயம் காரணமாக விளையாடவில்லை.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்கு முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ன டில்சான் ஓட்டமெதனையும் எடுக்காமல் யூசுப்பதானால் ரன் அவுட் செய்யப்பட்டு ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக சனத் ஜெயசூரியாவுடன் இணைந்த சங்கக்கார நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

மறுமுனையில் ஜெயசூரியா தனது வழமையான அதிரடியான ஆட்டத்தின் மூலம் ஓட்டங்களை எடுக்க இலங்கை அணி 13 ஓவர்கள் நிறைவில் 50 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து அதிரடியாக ஆடிய சனத் ஜெயசூரியா தனது 67ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி சங்கக்கார சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி 26 ஓவர்கள் நிறைவில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இந்த ஜோடி 2ஆவது விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய குமார் சங்கக்கார 44 ஓட்டங்களை எடுத்து ஓஜாவின் பந்துவீச்சில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கன்டாம்பி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் அதிரடியாக ஆடிய சனத் ஜெயசூரியா 108 பந்துகளில் தனது 28ஆவது சதத்தை பூர்த்தி செய்ய இலங்கை அணி 35.1 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் மறுமுறையில் கன்டாம்பி 17 ஓட்டங்களை எடுத்தபோது இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் சகீர் கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மகரூப் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார்.

எனினும் மறுமுனையில் ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வழங்கிய சனத் ஜெயசூரியா 114 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 107 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் பட்டேலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 19 பந்துகளை எதிர் கொண்டு 11 ஓட்டங்களை மாத்திரமெடுத்து இஷாந்சர்மாவின் பந்துவீச்சில் றோகித் சர்மாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 45.2 ஓவர்களில் 204 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்ததது.

அடுத்து கபுகெதர களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மகரூப் 27 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 35 ஓட்டங்களை எடுத்து இஷாந் சர்மாவினால் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய துஷார அதிரடியாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கபுகெதர 15 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து குலசேகர களமிறங்க இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 246 ஓட்டங்களை எடுத்தது.

இதில் துஷார ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் இஷாந் சர்மா 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான், ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 247 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 3.4 ஓவர்களில் 13 ஓட்டங்களை எடுத்த போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் 5 ஓட்டங்களுடன் துஷாரவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரெய்னா 2ஆவது விக்கெட்டுக்காக காம்பீருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை பகிர்ந்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 9.4 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடியின் இணைப்பை பிரிக்க இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா களத்தடுப்பில் பல வியூகங்கள் வகுத்த போதும் பலனளிக் காமல் போக இந்திய அணி 20.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அதிரடியாக ஆடிய காம்பீர் 54 ஆவது பந்தில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் சுரேஷ் ரெய்னாவும் 67 ஆவது பந்தில் தனது அரைச்சதத்தை கடந்தார்.

எனினும் இந்த ஜோடி 2ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 113 ஓட்டங்களை எடுத்த போது காம்பீர் 68 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 62 ஓட்டங்களை எடுத்த போது முரளிதரனின் பந்துவீச்சில் கன்டாம்பியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ்சிங் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ரெய்னா 70 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 54 ஓட்டங்களை எடுத்தபோது ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க இந்திய அணி 27.3 ஓவர்களில் 137ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி அதிரடியாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 30.1 ஓவர்களில் 150 ஓட்டங்களை கடந்தது.

எனினும் இந்த ஜோடி 4ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 44 ஓட்டங்களை எடுத்த போது யுவராஜ் சிங் 23 ஓட்டங்களுடன் மகரூப்பின் பந்துவீச்சில் முரளிதரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரோகித் சர்மா சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 41.2 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய தோனி 55 ஆவது பந்தில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 48.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 247 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 65 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 61 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 30 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் துஷார, மகரூப் மற்றும் முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் இலங்கை அணியில் சவாலான இலக்குக்கு சதமடித்து வழியமைத்த சனத் ஜெயசூரியா ஆட்டநாயகனாக தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறுகிறது.

(5)

# அணித்தலைவர் பதவியிலிருந்து மலிக் நீக்கம்; யூனிஸ் நியமனம்

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிரடி

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சில தினங்களுக்கு முன்பு சொந்த மண்ணில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்தது.

இதில் கடைசி ஒருநள் போட்டியில் 75 ஓட்டங்களில் சுருண்டு, 234 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை தழுவி இருந்தது. இதனால் அந்த அணி மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இதை தொடர்ந்து பாகிஸ்தான் அணியின் தலைவராக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இருந்த சொயிப் மலிக் நேற்று முன்தினம் அதிரடியாக நீக்கப்பட்டார். அவரிடம் ஆலோசித்த பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கூட்டம் லாகூரில் நடந்தது. இதில் யூனிஸ்கானை அணித்தலைவராக நியமிப்பது என்று ஒரு மனதாக முடிபு செய்யப்பட்டது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட 31 வயதான யூனிஸ்கானும் அணியை வழிநடத்திச் செல்ல சம்மதம் தெரிவித்தார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கு தனித்தனி அணித்தலைவர் என்பதில் நம்பிக்கை இல்லை. இரண்டுக்கும் யூனிஸ் கானே அணித்தலைவராக செயல் படுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் இஜாஸ் பட் நிருபர்களிடம் கூறினார்.

# சாதனைகள் படைத்த சனத் ஜெயசூரியா

(தம்புள்ள)

இலங்கை அணியின் அதிரடி நாயகன் சனத் ஜெயசூரியா நேற்று நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி யில் சதமடித்து பல சாதனைகளைப் பதிவுசெய்தார்.

இப்போட்டியில் சனத்ஜெயசூரியா 114 பந்துகளில் 107 ஓட்டங்களை எடுத்தார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக வயதில் சதம் பெற்ற சாதனையை அவர் படைத்தார்.

நேற்று ஜெயசூரியாவின் வயது 39 வருடங்களும் 212 நாட்களும் ஆகும். இதற்கு முன்பு இங்கிலாந்து அணியின் போய்கொட் (39 வருடங்கள் 51 நாட்கள்) 1979ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக சதம் பெற்றமையே சாதனையாக இருந்தது.

அத்துடன் நேற்று 428ஆவது போட்டியில் விளையாடிய சனத் ஜெயசூரியா 67 ஓட்டங்களை எடுத்தபோது சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 13ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 2ஆவது வீரர் என்ற சாதனையை பதிவுசெய்தார்.

முதலாவது இடத்திலுள்ள சச்சின் டெண்டுல்கர் 16ஆயிரத்து 427 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

அத்துடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக போட்டிகளில் 50 ஓட்டங்களை கடந்த வீரர்கள் என்ற கங்குலியின் சாதனையை முறியடித்து இரண்டாவது இடத்திற்கு ஜெயசூரியா முன்னேறினார்.

நேற்று தனது சதத்தை பூர்த்திசெய்த



ஜெயசூரியா 28 சதங்கள், 67அரைச்சதங்கள் உட்பட 95 போட்டிகளில் 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத் துள்ளார்.

கங்குலி இதுவரை 94 போட்டிகளில் (22 சதம் 72 அரைச்சதம்) 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார்.

இதில் டெண்டுல்கர் 132 போட்டிகளில் (42 சதம் 90 அரைச்சதம்) 50 ஓட்டங்களுக்கு மேல் கடந்து முதலாவது இடத்திலுள்ளார்.

# ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தமிழ்நாட்டில் அங்குரார்ப்பணம்

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வரும் தமிழக கட்சித் தலைவர்கள் இலங்கை தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக கூட்டாக செயற்படும் பொருட்டு 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்' என்னும் அமைப்பினை உருவாக்கி உள்ளனர்.

அத்தோடு இந்திய தேசபிதா காந்தியின் இறந்த தினமான ஜனவரி 30 ஆம்திகதி மௌன விரதப் போராட்டம் ஒன்றினையும் சென்னை மெரினா கடற்கரையில் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை மேற்கொள்ளவும் முடிவெடுத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி யுத்தம் நிறுத்தம் தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது விஜயம் ஏமாற்றம் அளித்துள்ளதாக பாட்டாளி மக்கள் கட்சி நேற்று அறிக்கை ஒன்றினை வெளிட்டது.

அதனைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தலைமையில் ஈழத்தமிழர் ஆதரவுக் கட்சிகள் நேற்று மாலை அவசர கூட்டமொன்றினை ஏற்பாடுசெய்தன. இக்கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன், தமிழர் தேசியக் கூட்டமைப்பு தலைவர் பழ நெடுமாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின்போதே மௌன விரதப்போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதுடன் புதிய அமைப்பொன்றின் கீழ் ஈழத்தமிழ் ஆதரவுக் கட்சிகள் இணைந்து பணியாற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவர்கள் மேற்கொள்ளவுள்ள மௌனவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இதேவேளை இலங்கைப் பிரச்சினையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க தி.மு.க. செயற்குழு பெப்ரவரி 3 ஆம் திகதி கூட்டப்படவுள்ளது. இதுவரை எழுப்பப்பட்ட கோரிக்கைகளுக்கு பிரணாப் முகர்ஜியின் இலங்கை பயணத்தில் எந்தத் தீர்வும் கிடைக்காததால் அன்று தி.மு.க. சார்பில் முக்கிய முடிபு எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை சென்று திரும்பிய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி பாதுகாப்பு வலயங்களில் தாக்குதல் நடத்தமாட்டோம் என ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியளித்திருப்பதாக கூறினார்.(ச-5,14)

# போர் நிறுத்தம் பற்றி முகர்ஜி எதுவும் பேசவில்லை

## அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்தம் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லையென தேசிய பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமாக கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்தியநிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தொலைபேசி மூலம் ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

வன்னியில் என்ன நடக்கிறது என்பதை ஊடக அறிக்கைகள் மூலம் தெரிந்து கொள்வதை விட அவற்றை நேரில் கண்டுகொள்ளும் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கும் நோக்கிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

வன்னி மோதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் பலியாவதாகவும் படுகாயமடைவதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஆனால் மோதல்களில் பலியாவதும் காயமடைவதும் பொதுமக்கள்தான் என்று இவர் எந்தஅளவுகோலைக்கொண்டு கணித்துள்ளார் என்பதே கேள்வியாகும்.

பயங்கரவாதிகளையும் பொதுமக்களையும் பிரித்தறியக் கூடிய திறமை இந்தச் சர்வதேச நிறுவன அதிகாரிகளிடம் இருக்கின்றதா? சில சமயங்களில் பொதுமக்கள் போலவும் சில சமயங்களில் பயங்கரவாதிகள் போன்றும் செயற்படும் இவர்களை அவர்கள் எவ்வாறு அடையாளம் காண்பார்கள்?

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் இராணுவம் தாக்குதல் மேற்கொண்டதாக சில ஊடகங்கள் பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றன. அப்பாவிப்பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டிய தேவை அரசிற்கு இல்லை என்றார். (ச-5,14)

## வன்னியில் மனிதாபி...

முகவரமைப்புகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டுப்பாடுகள் விதிக்கக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் பாதையை நோக்கிய அரசியல் தீர்வை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் பெனிற்றா கூறியுள்ளார்.

அதே சமயம் அண்மையில் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் செயற்படும் முறைமை குறித்து விளக்கங்களை அளிக்குமாறு பெனிற்றா வோல்ட்னரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக ஆணையாளர் கதரீன் அஸ்ரனும் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கவலைகளையும் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். (ச-5)

## கருணாநிதி...

சென்னையில் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித் துப்பேசினார் ஜெயலலிதா. அப்போது அவர் கூறியதாவது;

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு முதல்வர் கருணாநிதிதான் இலங்கை செல்ல வேண்டும்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். அதற்கு புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும்.

விடுதலைப்புலிகள், முதல்வர் கருணாநிதி சொன்னால்தான் கேட்பார்கள். நாங்கள் சொன்னால் எதுவும் கேட்கமாட்டார்கள்.

நான் என்றுமே விடுதலைப் புலிகளை ஆதரித்ததில்லை. எனவே கருணாநிதி இலங்கை செல்வதுதான் பொருத்தமாக இருக்கும் இவ்வாறு ஜெயலலிதா பேட்டியளித்தார்.(ச-5)

## மோதல்களில் சிக்கியுள்ள மக்களை...

மற்ற பகுதிகளுக்கும் ஊடுருவி வருகிறது.

இந்தப் பகுதியில் சுமார் 3 இலட்சம் தமிழர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் மீதும் இராணுவம் கண்மூடித்தனமாக குண்டு வீசுகிறது. இதில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் பலியாகி வருகின்றனர்.

எனவே அங்கு உடனடியாக போரை நிறுத்தும்படி தமிழக தலைவர்கள் வற்புறுத்தினார்கள். அங்கு நிலைமை மிக மோசமானதை அடுத்து முதலமைச்சர் கருணாநிதி மத்திய அரசுடன் பேசினார். இதையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைக்க மத்திய அரசு முடிபு செய்தது.

அவர் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு பேசிவிட்டு நேற்று முன்தினம் அவசரமாக இலங்கைக்குப் புறப்பட்டு வந்தார்.

கொழும்பு வந்தவுடனேயே பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார். ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நடந்தது. அப்போது பிரணாப் முகர்ஜி போர் முனையில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழர்களை பாதுகாக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும். அவர்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார். சந்திப்பு முடிந்து பிரணாப் முகர்ஜி நேற்றே டெல்லி திரும்பினார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் இருதரப்பு சண்டைக்கும் நடுவே சிக்கியுள்ள அப்பாவி தமிழர்களை பாதுகாப்பது குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் கூறினேன்.

அவர் தமிழர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தார். போர் முனையில் ஒரு இலட்சம் தமிழர்கள் வரை உள்ளனர். அவர்கள் பாதுகாப்பாக இருக்க பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியை மேலும் விஸ்தரிக்க வேண்டும். இங்கு குண்டு வீச்சுக்களோ, துப்பாக்கி சூடுகளோ நடத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டேன். இதற்கும் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மக்கள் எளிதாக செல்ல வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்கு உணவு மற்றும் மருந்து வசதிகள் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

தமிழர்களுக்கு உடனடித் தேவைகள் வழங்கவும் அவர் உறுதியளித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக பிரணாப் முகர்ஜி இலங்கையில் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது,

போர் நடக்கும் இடத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இருவரும் ஆலோசித்தோம். போர் முனையில் சிக்கி இருக்கும் அப்பாவி மக்களை காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

இலங்கையில் வட கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு இந்தியா எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால் விடுதலைப் புலிகள் இந்தப் பகுதியில் இருப்பதால் அவர்களுக்கு இதை நிறைவேற்ற முடியவில்லை.

தமிழர்கள் போர் பாதிப்பில் இருந்து மீண்டு, மாமூல் நிலைக்கு திரும்ப இந்தியா இலங்கை அரசுடன் சேர்ந்து அனைத்து பணிகளையும், உதவிகளையும் செய்யும்.

இலங்கை தமிழர் பகுதிகளில் அடிப்படை கட்டுமான பணிகளுக்கு இந்தியா தேவையான உதவியை செய்து வருகிறது என்றுள்ளது. (ச-5,14)

## இரண்டு மாதகால...

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன் போது கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

முல்லைத்தீவு பிரதேசத்தில் சுமார் 300 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புக்குள்ளேயே விடுதலைப்புலி உறுப்பினர்கள் தற்போது முடக்கப்பட்டுள்ளனர். புலிகளின் நிலைகளை நோக்கி தொடர்ந்தும் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டு வரும் படையினர் தற்போது 7 முனைகளினூடாக முன்னகர்வினை மேற் கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு தெற்கில் இருந்து வடக்கு நோக்கியும், புதுக்குடியிருப்பு தெற்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, உடையார்கட்டுகுளம். விசுவமடு. கல்மடுக்குளம், சுண்டிக்குளம் போன்ற பகுதிகளினூடாகவே படையினர் தமது முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி கல்மடுக்குளம் அணைக்கட்டு தாக்கியுடைக்கப்பட்டதில் ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளால் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் இதன்போது படைத்தரப்புக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பதே உண்மை.

ஜனவரி முதலாம் திகதி முதல் இன்றுவரை அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி சுமார் 3 ஆயிரத்து 141 பொதுமக்கள் வருகை தந்துள்ளனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் தற்போது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றார். (ச)

## முகர்ஜிக்கு வாக்குறுதி அளித்து...

இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டிருந்த இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி மகிந்த உறுதியளித்ததாக கொழும்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே மக்கள் பாதுகாப்பு வலயப்பகுதிகளான உடையார்கட்டு, மூங்கிலாறு, தேவிபுரம், சுதந்திரபுரம், வல்லிபுனம் ஆகிய பகுதிகள் மீது படையினர் நேற்று நடத்திய எறிகணை, பல்குழல் வெடிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 121 பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை முல்லைத்தீவில் உள்ள காந்தி சிறுவர் பராமரிப்பு இல்லம்மீது நேற்று புதன்கிழமை நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் சிறுமி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சிறுமிகள் படுகாயமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதேவேளை உடையார்கட்டு ,தேவிபுரம், வல்லிபுனம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட எறிகணைத்தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் 45 பேர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக புதுக்குடியிருப்பு மருத்துவமனை மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், நேற்றுவரையில் காயமடைந்தவர்களில் 556 பேர் மருத்துவமனையில் தற்போதும் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் 200 பேர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டு செல்லப்படவேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

வன்னியில் உள்ள அமெரிக்க மிஷன் திருச்சபையின் முறிகண்டி பங்குத்தந்தை மதகுருவான ஆனந்தராஜாவும் நேற்றைய எறிகணைத் தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

இவரின் ஆலயம் அமைந்துள்ள வளாகத்தில் வீழ்ந்த எறிகணையினால் காயமடைந்த இவருடன் மேலும் மூன்றுபேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இந்த மூன்று பேரும் முறிகண்டித் திருச்சபையில் கல்வி பயிலும் மாணவர்கள் என்று மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (எ-5,14)

## திட்டமிட்டபடி...

ஏ-9 வீதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் இந்தப் பணிகளும் விரைவில் முடிபடைந்துவிடும் என்பதால் வீதியைத் திறப்பதில் தாமதம் ஏற்படாது என்றும் அமைச்சர் எக்கநாயக்க விளக்கினார்.

துரித அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் பல நெடுஞ் சாலைகள் மற்றும் 18 பாலங்களை புனரமைக்கும் பணிகள் கிட்டத்தட்ட முழுமையாக நிறைவடைந்துள்ளன. எனவே ஏ -9 வீதி திறக்கப்படுவதை ஒரு நாள் கூட தாமதம் செய்ய மாட்டோம் என்றார் அமைச்சர். (ச-5)


## கொமர்ஷல் வங்கி

### சுன்னாகம் கிளையின் அறிவித்தல்

கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையின் தொலைபேசி இலக்கங்கள் புதன்கிழமை (28.01.2009) மதியம் முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களிற்கும் மற்றும் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

☎ 021 224 0486 [Manager]
☎ 021 224 0521 [General]
☎ 021 224 0522 [General]
☎ 021 224 0523 [Fax]

-முகாமையாளர்

(C-2084)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.